பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 25 வியாழக்கிழமை 09.07.2020 கதிர் 242

இது ரகசியம் அல்ல!

தேர்தல் அரசியல் ஆள்களை எப்படி, எப்படி எல்லாம் மாற்றுகின்றது என்பது அதிசயம்தான்.

யாழ்ப்பாணத்தில் ஊடகத் தரப்புகளிடையே அணிச் சமர்கள், கோஷ்டி மோதல்கள், கால் வாரல்கள் என்று அது ஒருதனி அரசியல். நான் பெரும்பாலும் பக்கம்02 »

## மன்னாருக்கு 14 ஆம் திகதி பயணிக்கின்றார் மஹிந்த

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 09


மன்னார் நடுக்குடாவில் அமைக்கப்படும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தைப் பார்வையிடப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 14ஆம் திகதி மன்னார் செல்கிறார்.

மன்னாரில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மின் உற்பத்தி நிலையத்தின் பணிகளை நேரில் பார்வையிடும் நோக்கிலேயே அவர் அங்கு பயணிக்கிறார் எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இப் பயணம் தொடர்பில் ஆணைக்குழு பக்கம் 02 »

## இராணுவத்தின் அச்சுறுத்தல்கள் மூலம் ஆட்சியைத் தக்கவைக்க அரசு முயற்சி!

### நீதியான தேர்தல் நடைபெற வேண்டும்; ஆணைக்குழுவிடம் ரணில் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 09

வடக்கு, கிழக்கு உட்படநாடெங்கும் இராணுவத்தினரையும், புலனாய்வாளர்களையும் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல்கள், மிரட்டல்களை விடுத்து – அவர்களை அடிபணிய வைத்துப் பொதுத்தேர்தலில் வெற்றி பெற அரசு பக்கம் 02 »

# மக்கள் எம் பக்கம்; வெற்றி நிச்சயம் தேர்தலில் எமக்கேன் இராணுவம்?



## எதிரணியின் அபாண்டக் குற்றச்சாட்டை குப்பையில் வீசுங்கள் என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜூலை 09

நாட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சி தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பம். அதற்காகக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சிக்கு ஆணை தந்த மக்கள், மீண்டும் பொதுத் தேர்தலிலும் ஆணை வழங்கக் காத்திருக்கின்றார்கள். இந்தநிலையில், எமது ஆட்சியைத் தக்கவைக்க இராணுவத்தினர் எதற்கு? அவர்கள் தங்கள் பாதுகாப்புக் கடமைகளைத் திறம்படச் செய்கின்றார்கள்.

– இவ்வாறு பிரதமரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். பக்கம் 02 »

## தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் யாழ். வருகிறார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 09

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் உறுப்பினர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களுக்கு வருகை தந்து இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் நேரில் ஆராயவுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் நேரில் பயணித்து தேர்தல் நிலைமைகளை ஆராயவுள்ளதோடு பல பகுதிகளுக்கும் நேரில் சென்று பக்கம் 02 »

## யாழில் 7 ஆசனங்களையும் கூட்டமைப்பே கைப்பற்றும்

### அடித்துக் கூறுகின்றார் சரவணபவன்




(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை 7 ஆசனங்களையும் யாழ்ப்பாணத்தில் கைப்பற்றும்.

– இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மரத்தில் பக்கம் 11 »

## தனு ரொக், விக்ரர் டிலான் பொலிஸாரினால் கைது!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 09

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளில் விக்ரர் டிலான் மற்றும் தனு ரொக் ஆகியோர் கைது சந்தேகத்தின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலைய இரகசியப் பொலிஸார் நவாலியில் நேற்று மாலை முன்னெடுத்த நடவடிக்கையின்போது, அவர்களைக் பக்கம் 02 »

## ஆட்ட நிர்ணய விசாரணை அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு!



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் ஆட்ட நிர்ணய விசாரணை அறிக்கை, சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக, சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டியின்போது எவ்வித ஆட்ட நிர்ணய சதியும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்து, விளையாட்டு அமைச்சிலுள்ள விளையாட்டுத் தவறுகளைத் தடுக்கும் விசேட பொலிஸ் பிரிவு சமர்ப்பித்த குறித்த அறிக்கையை, விளையாட்டு அமைச்சின் செயலாளர் சட்டமா அதிபர் பக்கம் 02 »

## அரச ஊழியர் மீது வாள்வெட்டு; மல்லாகத்தில் ஐந்து பேர் கைது

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 09

யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பெருங்குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரின் நடவடிக்கையில் சந்தேக நபர்கள் நேற்றிரவு மல்லாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அவர்களி பக்கம் 02 »



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் பெரும்பாலும் இந்தத் தரப்புகளுக்குள் அதிகம் சிக்குவதில்லை. எம்மதமும் சம்மதம் என்ற மாதிரி, எல்லாத் தரப்புகளுடன் சமதூரத்தில், சம ஈடுபாட்டுடனும் பழகுவேன். எந்த ஊடக சங்கத்திலும் உறுப்பினராக இல்லாவிட்டாலும் எல்லாச் சங்கங்களும், குழுக்களும் எனக்கு நேசமே. எல்லோருடனும் ஓடும் புளியம் பழமும் போல பழகிக்கொள்வது ஒரு தனிக்கலை.

நமது ஊடகத் தரப்புக்குள் இருக்கும் அந்த அரசியலை அதிகம் ஆழமாக நோண்டப் போவது நமது பல்லை நாமே குத்தி ஏதோ செய்வது போன்றதாகி விடும். அதனால் விட்டு விடுகிறேன்.

ஆனாலும் வடக்கு அரசியல் தலைவர்களுக்கு இந்த ஊடகத் தரப்புகளின் பிறாண்டல்களினால் ஒரு சிக்கல்.

இந்த இடத்தில் செய்தியாளர் மாநாட்டை வைத்தால் அந்த ஊடகம் வராது, அந்த இடத்தில் வைத்தால் இந்த ஊடகம் வராது என்ற தொல்லை.

வழக்கமாக யாழ் ஊடக அமையத்தில் நடக்கும் செய்தியாளர் சந்திப்புகள், மாநாடுகளை வடக்கில் ஒரு சில முன்னணி ஊடகங்கள் கண்டு கொள்வதே இல்லை. ஏதோ யாழ் ஊடக அமையம் தீண்டத்தகாத தரப்பு என்ற மாதிரியான எண்ணம் அவற்றுக்கும். அதற்கும் ஏதேனும் காரணங்கள் இருக்கலாம்.

நான் இன்னும் ஊடக அமையத்துக்குள் போய் வருபவன் அல்லன். எனினும் அங்கு நடைபெறும் நிகழ்வுகளை எல்லாம் தவறாது எமது செய்தியாளர்கள் மூலம் பயன்படுத்தியே வருகிறோம். அத்தரப்புடன் ஏதேனும் விரோதமும் இல்லை. அதீத நெருக்கமும் இல்லை. இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்வதானால் அவர்கள் வெளியில் நடத்திய நிகழ்வு ஒன்றில் என்னைப் பெரிதும் மதித்து கௌரவித்துள்ளார்கள்.

ஆனால், நேற்று ஒரு விநோதம். கடந்த எட்டுப் பத்து வருடங்களாக ஊடக அமையத்தை பகிஷ்கரித்து, அங்கு இடம்பெறும் செய்தியாளர்கள் சந்திப்புகள் மற்றும் ஊடக அமையத்தின் நடவடிக்கைகளைப் புறக்கணித்து வந்த ஓர் ஊடகத்தின் முதலாளி, நேற்று ஊடக அமையத்தில் பெரும் தாள வாத்தியக் கச்சேரி நடத்தியமைதான் அந்த அதிசயம். பார்த்த யாழ் ஊடகவியலாளர்கள் எல்லோரும் மெய்சிலிர்த்துத்தான் போனார்கள்.

இது குறித்து என் ஊடக நண்பர் ஒருவர் கொமெண்ட் அடித்தார்.

*"அவருக்கென்ன...? 'இதுவரை ஊடக அமையத்தை ஏற்றதோ, நிராகரித்ததோ நான் அல்லன். அது ஆசிரிய பீடம். ஆசிரிய பீட விடயத்தில் நான் தலையிடுவதே இல்லை' என்று விளக்கம், வியாக்கியானம் கூறி அவர் சமாளிப்பார்...!"* என்றார் அந்த நண்பர்.

அவர் அப்படித்தான் கூறுவார். அரசியலுக்காக இந்த சமயத்தில் ஊடக அமையத்தையும் கையில் போட வேண்டிய தேவை இருப்பதால் அப்படிச் செய்வார். அமையத்தையும் சமயம் பார்த்துக் கையாளும் தந்திரம் இது...!

ஆனால் எனக்கு ஒரு மனக்குறை உண்டு. சில நாள்களுக்கு முன்னர் கூட ஊடக அமையத்துக்குப் பரிந்து நான் ஒரு சில வசனங்களை இப்பத்தியில் எழுதியிருந்தமையை வாசகர்கள் அறிவர்.

எல்லா ஊடகங்களையும் அரவணைத்து – ஒருமித்து – நின்றால்தான் ஊடக அமையத்துக்கு அது பலம் என்பதும் எனக்குத் தெரியும். அதை ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால், சமயம் பார்த்து அமையத்தைக் கையில் போடவும், 'சுளையாக' வீழ்த்தவும் தேர்தல் சமயத்தைப் பயன்படுத்த அனுமதிப்பது அமையத்துக்கும் அதன் ஊடகவியலாளர்களுக்கும் இழுக்கு என்பதுதான் என் கருத்து.

நான் அமையத்தின் உறுப்பினனும் அல்லன். அதை வளர்த்தவன் என்று உரிமை கோரும் தகுதியுடையவனும் அல்லன். வெறும் ஊடகப் பார்வையாளன். அவ்வளவே.

அமையத்தை நடத்துவதில் உள்ள சிக்கல்கள், பிய்ச்சல்கள், பிடுங்கல்கள் அதன் நிர்வாகிகளுக்குத்தான் விளங்கும். அவர்களும் கைதேர்ந்த ஊடகவியலாளர்களே. சரியானதைச் செய்வார்கள் என்று நம்புவோமாக...!

– மின்னல் –

---

## இராணுவத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டுள்ளது. மீண்டும் ஆட்சியில் அமர்வதற்காக இவ்வாறு பல்வேறு திட்டங்களை அரசு மறைமுகமாகச் செயற்படுத்த முனைகின்றது.

– இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க.

எவரினதும் தலையீடுகளின்றி நீதியான தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே இந்த நாட்டிலுள்ள மக்களினதும் எங்களினதும் விருப்பமாகும். எனவே, அதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு உடன் எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பாதுகாப்பு என்ற போர்வையில் நாட்டில் என்றுமில்லாதவாறு இராணுவத்தின் பிரசன்னம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, மூலைமுடுக்கெல்லாம் புலனாய்வாளர்களும் களமிறக்கப்பட்டுள்ளனர். அதிகாரத்தில் உள்ளவர்களின் உத்தரவுக்கமைய இந்த நிலைமை உருவாகியுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நாட்டு மக்கள் தமது ஜனநாயகக் கடமையைச் சுதந்திரமாகச் செய்யத் தீர்மானித்துள்ள நிலையில் அவர்களுக்கும், எதிரணிகளின் வேட்பாளர்களுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அச்சுறுத்தல்கள் விடுக்கும் வகையில் படையினர் நடந்து கொள்கின்றார்கள். இந்தநிலையில், நீதியான தேர்தல் எப்படி நடக்கும்? மக்கள் எப்படி சுதந்திரமாக வாக்களிக்க முடியும்?

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உடன் கவனம் செலுத்த வேண்டும். அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தாமதமின்றி எடுக்க வேண்டும் – என்றார்.

---

## மக்கள் எம் பக்கம்;...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரைப் பெரும் எண்ணிக்கையில் பயன்படுத்தி அவர்களின் அச்சுறுத்தல்கள் மூலம் ஆட்சியைத் தக்க வைக்க அரசு முயல்கின்றது என எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இது தொடர்பில் பிரதமரின் நிலைப்பாட்டைக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டு மக்கள் எமது பக்கமே இருக்கின்றார்கள். பொதுத்தேர்தலில் எமது கட்சியின் வெற்றி ஏற்கனவே உறுதிசெய்யப்பட்டுவிட்டது. ஆட்சி அதிகாரத்தை நாம் பெறுவது உறுதி. எனினும், மூன்றிலிரண்டு பெரும்பான்மையே எமது பிரதான இலக்கு. அந்த இலக்கை நாம் அடைந்தே தீருவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தநிலையில், எமது மக்கள் பலத்தைப் பொறுக்க முடியாத எதிர்க் கட்சியினர் இராணுவம், இராணுவம் என்று பிதற்றுகின்றார்கள். அவர்களின் கருத்துக்களைத் தூக்கிக் குப்பையில் வீசுங்கள் – என்றார்.

---

## தனு ரொக்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டபின் தப்பி ஓட முற்பட்டபோதே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

வீடொன்று மீது பெற்றோல் குண்டு வீசிய வழக்கி ல் விக்ரர் டிலான் சந்தேக நபராக உள்ளார் என்று குறிப்பிட்ட பொலிஸார், தனு ரொக்குக்கு எந்தவொரு வழக்கும் நிலுவையில் இல்லை என்றும் கூறினர்.

சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இருவரும் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்றும் மானிப்பாய் பொலிஸார் கூறினர்.

## அரச ஊழியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமிருந்து வாள்கள் இரண்டு, கைக்கோடரி ஒன்று, மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மற்றும் ஓட்டோ ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

மல்லாகம் கனி குழுவைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர். தாக்குதலில் காயமடைந்தவரும் முன்னர் அந்தக் குழுவில் இருந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மல்லாகத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் பிரகாஷ் எனும் சுற்றுச்சூழல் அதிகார சபை உத்தியோகத்தர் மீதே நேற்றுப் புதன்கிழமை காலை தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்த உத்தியோகத்தர் வழமை போன்று நேற்றைய தினம் காலை கடமைக்காக வந்தபோது, அவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிள் வந்த நால்வர் மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வழிமறித்து அவர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலில் கையில் வாள்வெட்டுக் காயத்துக்கு இலக்கான உத்தியோகத்தர் பாதுகாப்பு தேடி மாவட்ட செயலகத்தினுள் ஓடியுள்ளார். அதன் போதும் இருவர் அவரைப் பின்தொடர்ந்து மாவட்ட செயலக வளாகத்தினுள் புகுந்தும் தாக்குதலை மேற்கொண்டமையுடன் வெளியில் வந்து வேறொருவரின் மோட்டார் சைக்கிள் மீதும் தாக்குதல் மேற்கொண்டு அதனைச் சேதமாக்கிவிட்டு தப்பிச் சென்றனர்.

தாக்குதலுக்கு இலக்கான உத்தியோகத் தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு மாவட்ட செயலகத்தில் தெரிவத்தாட்சி அலுவலகமும் செயற்பட்டு வருகின்றது. வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து மாவட்ட செயலகம் தெரிவத்தாட்சி அலுவலகம் எனும் ரீதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு இருந்தன.

இந்நிலையிலையே பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உள்ள மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வன்முறைக் கும்பல் மோட்டார் சைக்கிள் வந்து வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பி சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது யாழ்ப்பாண பொலிஸார், மாவட்ட செயலகக் கண்காணிப்புக் கமராக்களின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்)

---

## ஆட்ட நிர்ணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளார் என அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த இறுதி அறிக்கை தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஆலோசனைகளைப் பெறுவதற்காக, அது சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என விளையாட்டு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவினால் முன்வைக்கப்பட்ட குறித்த குற்றச்சாட்டு தொடர்பில், அவரிடமும், அதனைத் தொடர்ந்து குறித்த காலப்பகுதியில் இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட அரவிந்த டி சில்வாவிடம் சுமார் 6 மணி நேர வாக்குமூலமும் (ஜூன் 30), அப்போட்டியில் பங்குபற்றிய கிரிக்கெட் வீரர் உபுல் தரங்கவிடம் இரண்டரை மணி நேர வாக்குமூலமும் (ஜூலை 01), அவ்வணிக்குத் தலைமை தாங்கிய குமார் சங்கக்கார விடம் (ஜூலை 02) சுமார் 10 மணி நேர வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டது.

அதேவேளை, அவ்வணியின் அப்போதைய உப தலைவர் மஹேல ஜயவர்தனவுக்கு ஜூலை 03ஆம் திகதி வாக்குமூலம் பெற அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், இறுதி நேரத்தில் அவரை ஆஜராக வேண்டாம் என விளையாட்டு தொடர்பான குற்றங்களை விசாரணை செய்யும் பிரிவினால் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட கவனம் செலுத்தி அதற்கான அனுமதியை நிபந்தனைகளின் கீழ் வழங்கியுள்ளது.

அதன் அடிப்படையில் பிரதமர் கலந்து கொள்ளும் நிகழ்வில் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களும் பங்கு கொண்டு அங்கே எந்தவிதமான அரசியல் செயல்பாடும் இடம்பெறாத வண்ணம் கண்காணிப்பதோடு உரைகளையும் முழுமையாக ஒலிப்பதிவு செய்வர். அதேபோன்று பிரதமரின் கட்சி சார்பில் அந்தத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள முடியாது என கடும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

---

## தேர்தல் ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையிடுவர்.

அரச திட்டங்கள் துஷ்பிரயோகம், தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் இருந்து தொடர்ச்சியாக முறைப்பாடுகள் முன்வைக்கப்படும் நிலையில் தவிசாளரின் வருகை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

---

## யாழில் 7...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டிக்கொடுத்து எல்லாம் முடிந்திருக்கும்.

ஆனால் இந்த ஆயுதத்தை பிழையான முறையில் பாவித்தவர்களும் குறிப்பாக மக்களுக்காக அந்த ஆயுதப் போராட்டத்தை பாவிக்காமல் விட்டவர்கள் தான் சில ஆயுதக் குழுக்கள். எனவே நாங்கள் எப்போதும் ஒருமித்து சில விடயங்களை கடந்த காலங்களில் செய்திருக்கிறோம். அவ்வாறு செயற்பட்ட பல நன்மைகளை அடைந்திருக்கின்றோம்.

சாத்வீகம் என்று சொல்லி தொடங்கி பின்னர் ஜனநாயகம் என்று வந்தோம். அதுவும் தோல்வியுறத்தான் நாங்கள் ஆயுதப் போராட்டத்திற்குள் போனோம். ஆயுதப் போராட்டத்திற்குள் சென்ற நிலையில் அது கள்ளம் கபடமாக மௌனிக்கப்பட்டது. ஆயுதப் போராட்ட காலத்தில் எல்லோரும் வந்து தீர்வு பற்றி பேசினர். ஆனால் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை சர்வதேசமும் சரி, அதே போல ராஜபக்ஷவும் ரணிலும் சிறிசேனவும் சரி, ஒருவரும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை சரியான முறையில் செய்து தரவில்லை.

ஆனால் ஒரளவிற்கு நல்லாட்சி அரசில் நாங்கள் பல விடயங்களை அடைந்திருக்கிறோம். தற்போது மீண்டும் யார் வரக் கூடாதென்று நாங்கள் நல்லாட்சியைக் கொண்டு வந்தோமோ அவர்களே இப்போது வந்துவிட்டார்கள். அவர்கள் வந்த பின்னர் பாருங்கள் ஒவ்வொன்றாக என்ன நடந்து கொண்டிருக்கின்றது . எனவே நாங்கள் மிக அவதானமாக, அதாவது மக்களுக்காகச் செயற்படுகின்ற நாங்கள் மக்கள் சேவை செய்கின்ற போது மிக அவதானமாக ,முதிர்ச்சியான கருத்துக்களை வெளிப்படுத்த வேண் டும்.

கேள்வி:–கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாக அனந்தி சசிதரனுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது ஆனால் சுமந்திரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறதே?

பதில்:–அனந்தி சசிதரனுக்கு நீண்ட காலத்திற்குப் பின்னர்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுவும் சில அறிவுறுத்தல்கள் கொடுத்த பின்னர்தான் கட்சி மேலிடம் அவர் மேல் நடவடிக்கை எடுத்தது. இதில் நான் கட்சி எடுத்த முடிவைப் பற்றிச் சொல்வதை விட கட்சி தலைமைப்பீடம் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

ஆயினும் இதில் நான் ஒரு விடயத்தைக் கூற வேண்டியிருக்கின்றது. அதாவது கட்சி ஒருவரையும் நீக்கவில்லை. போனவர்கள் எல்லாரும் தாங்களாகத்தான் வெளியில் சென்றிருக்கின்றார்கள். இந்தக் கேள்விக்குப் பொருத்தமான பதிலைத் தலைவர் அல்லது செயலாளர்தான் சொல்லக் கூடியதாக இருக்கும். எனக்கு தெரிந்தாலும் கட்சியில் சில கட்டுப்பாடுகள் இருப்பதால் அதை நான் சொல்ல விரும்பவில்லை.

(இச் செவியின் எஞ்சிய பகுதி நாளை வெளிவரும்...)

# சகலரினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்து



இலங்கையில் மாகாண சபை முறைமையும், அதிகாரப் பகிர்வு பொறிமுறைமையும் தோல்வி கண்டுள்ளன. சமஷ்டிக் கட்டமைப்பையும் ஏற்கமுடியாது. அனைத்து இன மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய புதியதொரு அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இலங்கையில் சமஷ்டி பொறிமுறை நடைமுறைக்கு வருவதை ஜே.வி.பி. விரும்புகின்றதா என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையை சமஷ்டி கட்டமைப்புடைய நாடாக மாற்றுவதற்கு நாம் என்றும் எதிர்ப்பு என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன். கடந்த ஆட்சியின்போது புதிய அரசமைப்பு உருவாக்கப்படவில்லை. அதற்கான யோசனைகளே முன்வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு முன்வைக்கப்பட்ட எந்தவொரு யோசனையும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கும் வகையிலேயே புதிய அரசமைப்பு அவசியம் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்ந்தும் தேவையா என மக்களிடம் கருத்துகோர வேண்டும். ஏனெனில் மக்கள் ஆணையின்றியே 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

புதிய அரசமைப்பில் நாட்டின் ஒருமைப்பாடு, அனைத்து மக்களினதும் உரிமைகள் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதுடன், நவீன யுகத்துக்கேற்ற வகையிலான சரத்துகளும் உள்வாங்கப்படவேண்டும். ராஜபக்ஷ அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை அன்று இருந்தது. ஆனால், புதிய அரசமைப்பை இயற்றவில்லை. 18 ஆவது திருத்தச் சட்டமே கொண்டுவரப்பட்டது.

அதேவேளை, அதிகாரப்பகிர்வு நடைமுறை தோல்வி கண்டுள்ளது. மாகாண சபைகளும் முறையாக இயங்கவில்லை. எனவே, அனைத்து இன மக்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்தக்கூடிய புதிய அரசமைப்பு வேண்டும் - என்றார்.

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 09

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியி லிருந்து மாலை 5 மணிவரை-

**யாழ் பிரதேசத்தில் -**

பலாலி சந்தி பிரதேசம், வசாவிளான் ஒரு பகுதி, பலாலி விமான நிலைய பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில் -**

கிறிஸ்தவகுளம், புளியங்குளம், வாரிக்குட்டியூர், சங்கரபுரம் ஆகிய இடங்களிலும்,

**மேலும் மன்னார் பிரதேசத்தில் -**

சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyra House, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyra House கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களில் **காலை 6.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரையான காலப்பகுதியில் காலையில் இரண்டு மணித்தியாலங்களும் பிற்பகலில் இரண்டு மணித்தியாலங்களும்** மின்தடை ஏற்படும் என மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சந்திரிகா அம்மையாருக்கு காலம் பிந்திப் பிறந்த ஞானம்

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் மிகக் கவலைக்குரிய – வேதனைக்குரிய – ஒரு நாளின் இருபத்தியைந்தாவது வருட நினைவு தினம் இன்றாகும்.

இரண்டு தரப்புகளின் யுத்தத்துக்கு மத்தியில் யாழ்ப்பாணம் வெடிகுண்டுகளினால் அதிர்ந்தபோது, வேட்டுகளுக்கும், பீரங்கிகளுக்கும் ஷெல் குண்டுகளுக்கும் அஞ்சி, கர்த்தரிடமும், கந்தனிடமும் புகலிடம் தேடிய அப்பாவித் தமிழ் மக்கள் சதையும் பிண்டமுமாக பிய்த்துக் குதறிக் கொல்லப்பட்ட கொடூரத்தின் நினைவழியா நாள் இது.

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் (சின்னக் கதிர்காமம்) ஆலயத்திலும் தஞ்சம் புகுந்திருந்த 150 அப்பாவிப் பொதுமக்கள் கூண்டோடு கொல்லப்பட்ட கோரம் அரங்கேறி இன்றுடன் இருபத்தியைந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்காக பலாலியில் இருந்தும் அளவெட்டிப் பக்கத்திலிருந்தும் 'முன்னோக்கிப் பாய்தல்' என்ற பெரும் இராணுவ நடவடிக்கையை இலங்கை இராணுவம் ஆரம்பித்திருந்த சமயம் அது.

படையினர் நடத்திய கொடூர ஷெல், பீரங்கித் தாக்குதல்களினால் குடாநாடே அதிர்ந்தது. அதற்கு அஞ்சி இடம்பெயர்ந்த அப்பாவி மக்களில் ஒரு பகுதியினர் ஒரு சில நூறு பேர் நவாலியில் ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தஞ்சம் புகுந்திருந்தனர்.

குடாநாட்டின் பல பகுதிகள் மீதும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்திய இலங்கை விமானப் படையின் விமானங்களும் ஹெலிகளும் அதனால் பேரழிவு நாசங்களை ஏற்படுத்தின. அன்று மாலை நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயப் பகுதியில் பதின்மூன்று குண்டுகளை அடுத்தடுத்துப் பொழிந்தன இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள்.

நூற்றியைம்பது பேர் வரை அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினார்கள். அது போல இரண்டு மடங்கு எண்ணிக்கையினர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். அவர்களில் பலர் நிரந்தர அங்கவீனராகினர்.

இப்போது ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலில் இலங்கையின் பல இடங்களிலும் ஏறபட்ட அழிவை ஒத்த உயிர் சேதங்களையும் பொதுமக்களின் உடற் சேதங்களையும் அப்போது இலங்கை விமானப்படை ஒரிரு நிமிடத்தில் நவாலியில் அரங்கேற்றிச் சென்றிருந்தது.

மருந்துகளின்றி, மருத்துவ வசதிகளின்றி, ஆஸ்பத்திரிகள், வைத்தியர்களின்றி, இராணுவ முற்றுகைக்குள் நகர வழியின்றிச் சிக்கிக் கிடந்த யாழ் குடாநாடு மீதே இந்த அராஜகத்தை இலங்கை விமானப்படை புரிந்தது.

அப்போதுதான் சமாதான தேவதை போல தனது முகத்தைப் பிரகாசமாகக் காட்டி ஆட்சிப் பீடம் ஏறிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விடுதலைப் புலிகளுடனான தனது சமாதானப் பேச்சுகள் தன்னுடைய இராணுவத் திமிர்த்தனமான அணுகுமுறை காரணமாகத் தோல்வி கண்டமையை அடுத்து, தன்னுடைய போர்வெறிக் கொடூர வதனத்தையும் காட்டத் தொடங்கியிருந்தார். அந்தக் குரூரப் போக்கின் ஒரு பக்கத்தை உலகுக்கு எடுத்துக் காட்டும் கோரச் சம்பவமாக இந்தக் கொடூரம் அரங்கேறியது.

இந்தச் சம்பவம் நடந்து சற்றுநேரத்தில் அந்த இடத்தில் பிரசன்னமான செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் இந்தக் கோரம் பற்றிய விவரங்களை அம்பலப்படுத்தியபோது, அதனை சந்திரிகாவின் அரசு மறுதலித்தது. அப்படி ஒரு சம்பவமோ, விமானக் குண்டு வீச்சோ இடம்பெறவில்லை என்று ஒரேயடியாக மறுத்தது.

ஆனால், அவரது குற்ற மனம் நீண்ட காலத்துக்கு உறுதியாக நின்று பிடிக்கவில்லை. அப்படி ஒரு கொடூரச் சம்பவம் இடம்பெற்றது என்பதை அந்தப் பெண்மணி காலம் கடந்தாவது இப்போது ஒப்புக் கொண்டமை வரவேற்கத் தக்கதே.

*"யாழ் நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீது விமானப்படையினர் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல் தவறாகவே இடம்பெற்றது. விமானப்படையினரின் இலக்காகத் தேவாலயம் இருக்கவில்லை. அந்தச் சம்பவம் நடைபெற்றதாகக் கேள்விப்பட்டதுமே விமானப் படையினரைக் கண்டித்தேன்"* – இப்படி இப்போது கூறுகின்றார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

*"உயிரிழந்தவர்களை நினைவு கூர்வது அடிப்படை உரிமை. அதை யாரும் தடுக்கக் கூடாது"* – என்றும் கூறியிருக்கின்றார் சந்திரிகா அம்மையார்.

அவரது இந்த ஒப்புதல் வாக்கு மூலம் காலம் கடந்த ஞானம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு – அநீதி இழைக்கப்பட்ட மக்களுக்கு – இது நீதியைப் பெற்றுத் தரப் போவதில்லை.

எனினும், போர்வெறி முகத்தைக் காட்டித் தமிழர்களை ஈவு இரக்கமின்றிக் கொன்றொழித்த சிங்களத் தலைவி ஒருத்தியின் மனதில் குற்ற மனம் ஆழமாக வேரோடி, மனதைக் குடைந்திருக்கின்றமை நல்லிணக்கம் பிறப்பதற்கு வழிகாட்டுமானால் அது நல்லதே.

# தமிழருக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை; இந்தியாவின் '13 பிளஸை' அகற்றவே வேண்டும்

## இப்படி வலியுறுத்துகின்றது 'ராவணா பலய'

கொழும்பு, ஜூலை 09

*இந்தியாவால் திணிக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கமுடியாது. அது இல்லாதொழிக்கப் படவேண்டும்.*

- இவ்வாறு வலியுறுத்தினார் ராவணா பலய அமைப்பின் பொதுச்செயலர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர்.

அத்துடன், வடக்கு மக்களுக்கு வாழும் உரிமை இருந்தால்போது அவர்களுக்கு அதிகாரப்பகிர்வு அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதிகாரப்பகிர்வு தொடர்பில் கருத்து வெளியிட்ட இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் என்பது இந்திய அரசால் எமக்கு பலவந்தமாக திணிக்கப்பட்டதொன்றாகும். எனவே, அதனை மதிக்கவேண்டும், நடைமுறைப் படுத்தவேண்டும் என்பது கட்டாயமில்லை.

தேர்தல் காலத்தில் மாத்திரமே 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றி பேசப்படுகின்றது. தேர்தல் முடிந்த பிறகு 13 என்று ஒன்று இருக்கின்றதா என்றுகூட தெரியாது.

வடக்கு மக்களுக்கு சுதந்திரமாக வாழக் கூடிய சூழ்நிலையே அவசியமாகின்றது. வேலையின்மை பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டும், விவசாயத்தை முன்னெடுப்பதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும். இவை நடைபெற்றால் அதிகாரப் பகிர்வுக்கான அவசியம் எழாது.



அரசியல்வாதிகளே 13 பற்றி கருத்து வெளியிடுகின்றனர். மக்கள் அதிகாரப் பகிர்வை கோரவில்லை. தமிழ் அடிப்படைவாதிகள் தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்காகவும், சிங்கள சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்காகவுமே இவ்வாறான அறிவிப்புகளை விடுத்துவருகின்றனர்.

எனவே, அதிகாரப்பகிர்வு அவசியமில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எமது அமைப்பு முழுமையான எதிர்ப்பை வெளியிடுகின்றது - என்றார்.

# அரச அலுவலகங்களில் தேர்தல் பிரசாரத்துக்கு இடமளிக்க வேண்டாம்!

## ஆணையம் கண்டிப்பான உத்தரவு



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை அரச அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் மேற்கொள்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரச அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனப் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, மாகாண சபை அலுவலகங்கள், அரச பாடசாலைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் வசமுள்ள நிறுவனங்களில், தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனங்களில் துண்டுப் பிரசுரங்களை பகிருதல், வாக்குகளை இரந்து கேட்டல் மற்றும் கூட்டங்களை நடத்துவதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு, அரசியல்வாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழிற்சங்க செயற்பாட்டாளர்களிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன், குறித்த நிறுவனங்களில் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பது, நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் உப அலுவலகங்களின் தலைவர்களின் பொறுப்பாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# சிறீதேவி தடம்புரண்டதால் வடக்கு ரயில்கள் தாமதம்

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று அதிகாலை 3.45 மணியளவில் கொழும்பு நோக்கிப் பயணத்தை ஆரம்பித்த சிறீதேவி கடுகதி ரயில் காலை 5.50 மணியளவில் வவுனியாவின் எல்லையான ஈரப்பெரியகுளத்தில் ரயில் கடவையை விட்டு தடம் புரண்டதால் வடபகுதிக்கான ரயில் போக்குவரத்தில் தடங்கல் ஏற்பட்டது.

ரயில் தடம்புரண்டபோதும் பயணிகள் எவருக்கும் எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

தடம் புரண்ட பெட்டிகளை ஈரப்பெரியகுளம் ரயில் பாதையில் விட்டு விட்டு எஞ்சிய பெட்டிகளுடன் காலை 6.55 மணியளவில் கடுகதி ரயில் மீண்டும் கொழும்பை நோக்கிய தனது பயணத்தை தொடங்கியது.

தடம் புரண்ட ரயில் பெட்டிகளை அகற்றும் பணி ரயில்வே திணைக்களப் பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாக வட பகுதிக்கான ரயில் சேவையில் நேற்றுத் தாமதம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து காலை 5.30 மணிக்கும் மற்றும் காலை 6.20 மணிக்கு கொழும்பு நோக்கி பயணித்தை ஆரம்பித்த ரயில்கள் வவுனியா ரயில் நிலையத்தில் தரித்து நின்றன.

# யாழ்.செயலகம் முன்பாக அலுவலர் மீது வாள்வெட்டு!

## பலத்த பாதுப்புக்கு மத்தியில் புதன் காலை துணிகரம்



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 08

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உள்ள யாழ். தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் (மாவட்ட செயலகம்) முன்பாக மாவட்ட செயலக உத்தி யோகஸ்தர் மீது இனம் தெரியாத வர்களால் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மல்லாகத்தைச் சேர்ந்த பொன் னம்பலம் பிரகாஷ் என்ற சுற்றுச்சூழல் அதிகார சபை பிரிவின் உத்தியோகஸ்தர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவரது மோட்டார் சைக்கிளும் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தியோகஸ்தர் வழமை போன்று இன்று காலை கடமைக்காக வந்தபோது, அவரைப் பின் தொடர்ந்து இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வழிமறித்து அவர் மீது தாக்கு தலை மேற்கொண்டுள்ளனர்.

கையில் வாள் வெட்டுக் காயத்துக்கு இலக்கான உத்தியோகஸ்தர் பாது காப்புத் தேடி மாவட்ட செயலகத்துள் ஒடியுள்ளார்.

இதன்போதும், இருவர் அவரைப் பின் தொடர்ந்து மாவட்ட செயலக வளா கத்தினுள் புகுந்தும் தாக்குதலை மேற் கொண்டமையுடன், வெளியில் வந்து, அவரது மோட்டார் சைக்கிள் மீதும் தாக்குல் மேற்கொண்டு அதனைச் சேதமாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான உத்தி யோகஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலை முன் னிட்டு மாவட்ட செயலகத்தில், தெரிவத் தாட்சி அலுவலகமும் செயற்பட்டு வரு கின்றது.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து மாவட்ட செயலகம் தெரிவத்தாட்சி அலுவலகம் எனும் ரீதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத் தப்பட்டு இருந்தன.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடந்த இந்த தாக்குதல் பலரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

---

வெடிவிபத்தில் படுகாயமுற்ற

# முன்னாள் போராளி உயிரிழப்பு!



கிளிநொச்சி, ஜூலை 08

இயக்கச்சிப் பகுதியில் இடம் பெற்ற வெடிப்புச் சம்பவமொன்றில் படுகாய மடைந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த முன்னாள் போராளி உயிரிழந்தார்.

அதிகமான தீக்காயங்கள் இந்த உயிரிழப்புக்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

இதேவேளை, கிளிநொச்சி பளைப் பகுதியில் வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் குறிப்பிட்டு, மேலும் இருவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பளை, இயக்கச்சியில் கடந்த 3ஆம் திகதி வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. சி - 4 வெடிமருந்தை பயன்படுத்தி உள்ளூர் வெடிகுண்டு தயாரிக்க முயன்ற நிலையில், அது தவறுதலாக வெடித்ததில், குண்டு தயாரித்தவர் காயமடைந்தார். அவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். சிகிச்சை பலனளிக்காமல் அவர் உயிரிழந்தார்.

அதேசமயம் தடயங்களை அழிக்க முயன்றமை உள்ளிட்ட குற்றங்களுக்காக அவரது மனைவி கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன் தினம் இரவு வட்டக்கச்சிப் பகுதியில் வைத்து, இராமநாதபுரம் பகுதியை சேர்ந்த இரத்தினசிங்கம் கமலாகரன் (வயது - 40) என்ற 3 பிள்ளைகளின் தந்தையைக் கைது செய்தனர். முன்னாள் போராளியான அவர், சிவில் பாதுகாப்புத் திணைக்களத் தில் பணி புரிந்து வந்தார்.

காயமடைந்தவருடன் தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டில், அளவெட்டியைச் சேர்ந்த வைத்திலிங்கம் நிர்மலதாஸ் (வயது - 38) என்பவர் கொடிகாமத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். காயமடைந்தவருடன் தொலைபேசியில் பேசினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதான பெண் உள்ளிட்ட இருவரே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நடத்தப்பட்ட விசாரணையில் கரும்புலிகள் தினத்தில் வெடிப்பு சம்பவம் ஒன்றை நடத்தத் திட்ட மிட்ட தகவல் வெளியானதாக, பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

# புதிய அரசமைப்பை உருவாக்க ஆணை கேட்கின்றார் பஸில்

கொழும்பு, ஜூலை 08

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக பொதுத் தேர்தலில் உறுதியான அதிகாரத்தை வழங்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் –

நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும்.

ஒவ்வொருவரின் அழுத்தத்திற்கும் அடிபணிந்து ஒவ்வொரு பகுதியை இணைக்காமல், நாட்டுக்கு பொருத்தமான அரசமைப்பை உருவாக்குவதற்கு உறுதியான அதிகாரம் வேண்டும்.

இல்லாவிட்டால், அரசமைப்பு உருவாக்கத்தின் போது ஒவ்வொருவரின் பணயக் கைதிகளாக வேண்டிவரும் எனபஸில்ராஜபக்ஷதெரிவித்துள்ளார்.

---

# தமிழரின் உரிமைகளை நிராகரிக்கவே முடியாது!

## லக்ஸ்மன் யாப்பாவுக்கு சம்பந்தன் தக்க பதிலடி

திருமலை, ஜூலை 08

தமிழ் மக்கள் ஒரு நீண்டகால கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பின்பற்றி வருகின்றார்கள். அந்தவகையில் அவர்களின் உரிமைகளை எவரும் நிராகரிக்கவே முடியாது. இதனை மிகவும் உறுதியாக வலியுறுத்த விரும்புகின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்களுடைய தேசிய பிரச்சினை தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேயவர்தன தெரிவித்த கருத்துக்கு இரா.சம்பந்தன் இன்று வெளியிட்டுள்ள பதில் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினை விசேடமாக தமிழ் மக்களுடைய பிரச்சினை நாடு சுதந்திரம் டைந்த காலம் முதற்கொண்டு நீடித்து வருகின்றது.

1956ஆம் ஆண்டு தொடக்கம் சகலதமிழ்அரசியல்கட்சிகளும்இந்த நாட்டில் ஆட்சி முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காக ஜனநாயக ரீதியான கோரிக்கைகளை வைத்துதமிழ் மக்கள் தங்களுடைய ஏகோபித்த ஆதரவை அந்தக் கட்சிகளுக்கும் கொள்கைகளுக்கும் வழங்கி வந்துள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படையில், ஒரு மக்களை ஆட்சி புரிவதற்கு ஜனநாயக ரீதியாக அந்த மக்களுடைய சம்மதமும் இணக்கமும் பெறப்பட வேண்டும். அதனடிப்படையில்

(08ஆம் பக்கம் பார்க்க)

---

# சிவாஜிக்கு எதிரான மனு நிராகரிப்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 08

நாளை நடைபெறவுள்ள நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வுக்குச் செல்வதற்கு எம்.கே.சிவாஜிலிங் கத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி மானிப்பாய் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை மல்லாகம் நீதி மன்றம் நிராகரித்துள்ளது.

இன்று நண்பகல் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போதே இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளை மீள உருவாக்க முற்படுகின்றமை,

சென்.பீற்றர்ஸ் தேவாலயத்துக்கு முன்பாக 150 இற்கும் அதிகமானவர்களைத்திரட்டிஆர்ப்பாட்டம்செய்யவுள்ளமை போன்றதகவல்கள்தமக்குக்கிடைத்துள்ளன எனத்தெரிவித்துமானிப் பாய் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில்மனுத் தாக்கல் செய்திருந்தனர்.அதேவேளை, அவரை அங்கு செல்வதற்குத்தடைவிதிக்கவேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

இந்நிலையில் இன்று நண்பகல் சட்டத்தரணி சிறிகாந்தாவுடன் எம்.கே. சிவாஜிலிங்கம் நீதிமன்றில் முன்னிலையானார்.

அங்கு சிவாஜிலிங்கம் மீதான குற்றச்சாட்டு திட்டமிட்டு புனையப்பட்டது என்று சட்டத்தரணி வாதாடினார். இதன்போது சிவாஜிலிங்கம் தொடர்பில் தமக்குப்

(08ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# ‘நீட்’ஐ நிறுத்துக! ஸ்டாலின் கடிதம்



மருத்துவப் படிப்புக்கான நீட் தகுதிப் பரீட்சையை நிறுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட 3 கோரிக்கைகளை முன்வைத்துப் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

மருத்துவ மற்றும் பல் மருத்துவ படிப்புகளில், அகில இந்திய ஒதுக்கீட்டை நிறுத்துவதோடு இடஒதுக்கீட்டின்படி ஒதுக்கப்பட்ட பின்னர் சில இடங்களை தனியாக வைத்திருப்பது உட்பட, மாநில அரசுகள் தங்களுக்கென சொந்தப் பரீட்சை முறையைக் கடைப்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். நீட் பரீட்சை அறிமுகம் தமிழ்நாட்டின் மருத்துவக் கல்வியில் கடுமையான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது.

2020 ஆம் ஆண்டு நீட் பரீட்சைக்கு விண்ணப்பித்த தமிழக மாணவர்களின் எண்ணிக்கையில் 17 சதவீதம் குறைந்து இருப்பது இந்தப் பிரச்சினையை எடுத்துக்காட்டுகிறது. எனவே இந்தப் பரீட்சையை நிறுத்துவதோடு மாநிலங்கள் தங்கள் விருப்பப்படி பரீட்சைச் செயல் முறையை வைத்துக் கொள்வதற்கான உரிமையை வழங்க வேண்டும்’ என்று தெரிவித்துள்ளார்.



# எல்லையில் ஆற்றல் மிக்க வானூர்திகள் கண்காணிப்பு!

இந்தியா – சீனா எல்லைப்பகுதியான லடாக்கில் இரவிலும் பகலிலும் எந்தவித வானிலைக்கும் ஈடுகொடுத்துத் தாக்குதல் நடத்தும் ஆற்றல் பொருந்திய உலங்கு வானூர்திகளைக் குவித்து வருகிறது இந்திய விமானப்படை.

இந்திய விமானப்படையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட அப்பாச்சி, சினூக் உலங்கு வானூர்திகள் அங்கு அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. பீரங்கிகளைத் தகர்க்கும் ஏவுகணை வசதி கொண்ட இவற்றுடன்இ எம்.ஐ.ஜி – 29 போர் விமானங்கள், சுகோய் – 30 விமானங்கள், சி.எச். 47எப் (ஐ) சினூக் பல்நோக்கு உலங்கு வானூர்திகள் உள்ளிட்டவை எல்லையின் மலைப் பகுதிகளில் இரவுநேரப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. எத்தகைய வானிலை சூழலாக இருந்தாலும், மலை, தரை என எந்தப் பரப்பாக இருந்தாலும் இரவு, பகல்எனஎப்போதைக்கும்தாக்குதல் நடத்தும் ஆற்றல் உள்ளவை இவை என்று முன்னாள் விமானப் படைத் தளபதி பாலி எச் மேஜர் கூறினார்.

லடாக்கில் சீனா, இந்தியா இடையே எல்லைப் பிரச்சினையில் கடந்த 2 மாதங்களாகப் பதற்றம் நிலவுகிறது. கடந்த மே மாதம் எல்லையில் பதற்றம் தொடங்கியதிலிருந்தே இந்திய விமானப்படை அங்கு குவிக்கப்பட்டு வருகிறது. இரவு பகலாகக் கண்காணிப்புப் பணிகளிலும் இந்திய விமானங்கள் ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா வைரஸ் தடுப்பூசி ஏற்றப்படவுள்ள முதல் நபர்

இந்தியாவின் மேற்கு வங்காளத்தின் துர்காபூரைச் சேர்ந்த 30 வயதான ஆசிரியர் சிரஞ்சித் திபார் கொரோனா வைரஸ் தடுப்பூசியின் மருத்துவ பரிசோதனையில் பங்கேற்கும் முதல் நபராகப் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐதராபாத்தில் உள்ள பாரத் பையோரெக் நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் இந்தியன் நேனல் இன்ஸ்டியூட் ஆஃப் வைரலாஜி மையத்துடன் இணைந்து கொரோனாவிற்கு ‘கோவாக்சின்’ என்கிற தடுப்பூசியை கண்டுபிடித்துள்ளது.

இதற்கான அடிப்படை சோதனைகள் எல்லாம் நடந்து முடிந்த நிலையில், தற்போது மனிதர்களிடம் இந்த மருந்தைப் பரிசோதனை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது இதற்கான பணி ஒடிசா மற்றும் ஐதராபாத் அரசு மருத்துவமனைகளில் தொடங்கியது. இதில் மேற்கு வங்காளத்தின் துர்காபூரைச் சேர்ந்த 30 வயதான ஆசிரியர் சிரஞ்சித் திபார் கொரோனா வைரஸ் தடுப்பூசியின் மருத்துவ பரிசோதனையில் பங்கேற்கும் முதல் நபரானார்.

# 11 பேர் தகுதி நீக்க மனு தொடர்பில் சபாநாயகர் பதில் அளிக்க உத்தரவு



ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட 11 உறுப்பினர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டது தொடர்பாக தி.மு.க. தொடர்ந்த புதிய வழக்கில் சபாநாயகரைப் பதில் அளிக்கும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. தி.மு.க. கொறடா சக்கரபாணி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ’நீதிஶ்ரீமன்றம் உத்தரவு பிறப்பித்து 3 மாதங்கள் ஆகியும் சபாநாயகர் இது குறித்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, இந்த மனுவை விசாரணைக்கு ஏற்று, தனது தரப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஓ.பன்னீர் செல்வம், கே.பாண்டியராஜன் உள்ளிட்டோரைத் தகுதி நீக்கம் செய்ய வேண்டும்’ என்று கோரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், 11பேரையும் தகுதி நீக்கம் செய்யக் கோரும் விவகாரத்தில் சபாநாயகர் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை? எனக் கேள்வி எழுப்பினர். இந்த வியத்தில் சபாநாயகர் உடனடியாகச் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். இந்த வழக்கில் பதில் அளிக்கும்படி சபாநாயகர் மற்றும் பன்னீர்செல்வம் உள்ளிட்ட 11 பேருக்கும் நோட்டீஸ் அனுப்புவதற்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**பின்னணி**

தமிழக சட்டசபையில் முதலமைச்சர் எடப்பாடி பழனி சாமி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது 2017ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி வாக்கெடுப்பு நடந்தது. அந்த வாக்கெடுப்பில் தற்போதைய துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உட்பட 11 உறுப்பினர்கள் நம்பிக்கை தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

அவர்களைத் தகுதிநீக்கம் செய்யக்கோரி தி.மு.க. தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், இந்த விவகாரத்தில் சபாநாயகரே சட்டத்தின் அடிப்படையில் உரிய முடிவை எடுப்பார் என்று கூறி வழக்கை முடித்து வைத்திருந்தது.




# பொலிஸாரின் தாக்குதலால் சாவடைந்த மகன் குறித்து விசாரணை நடத்துங்கள்!

சாத்தான்குளம் பொலிஸார் தாக்கியதில் மேலும் ஒருவர் சாவடைந்த விவகாரம் தொடர்பாக, தந்தை, மகன் கொலையில் கைதாகி மதுரை சிறையில் அடைக்கப்பட்டுள்ள பொலிஸ் ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் ஆகியோரைப் பதிலளிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சாத்தான்குளத்தைச் சேர்ந்த வடிவு, உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனுவில் எனது கணவர் உயிரிழந்துவிட்டார். மகன்கள் துரை மற்றும் மகேந்திரனுடன் வசித்து வருகிறேன்.

இந்த நிலையில், ஜெயக்குமார் என்பவர் இறந்தது தொடர்பான வழக்கில் என் மகன் துரையை விசாரிப்பதற்குச் சாத்தான்குளம் உதவி ஆய்வாளர் ரகு கணேஷ் மே 22ஆம் திகதியன்று என் வீட்டிற்கு வந்தார். இளைய மகன் மகேந்திரபை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று 2 நாள்களாகக் காவலில் வைத்து கடுமையாகத் தாக்கினர்.

இதில் மகேந்திரனுக்கு தலை மற்றும் உடலில் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டன. சுயநினைவு இழந்த நிலையில் அவரை வெளியே அனுப்பினர். வீட்டிற்கு வந்ததும் உடல் நிலை மோசமடையவே மகேந்திரனை மருத்துவமனையில் சேர்த்தோம். மகேந்திரன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பாக விசாரணை நடத்தவும், எங்கள் குடும்பத்துக்கு உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்கவும் உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு விசாரணைக்கு வந்தபோது மேற்படிப் பொலிஸ் அதிகாரிகளைப் பதிலளிக்குமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தார் நீதிபதி

# திருப்பதியில் 44 பேருக்குக் கொரோனா!

இந்தியாவின் திருப்பதி தேவஸ்தான ஊழியர்கள் 44 பேருக்குக் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. ஏற்கனவே 17 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது 44பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. திருப்பதி ஏழுமலையான் கோவிலில் அர்ச்சகர், இசை கலைஞர், பாதுகாப்பு மற்றும் பறக்கும் படை ஊழியர்கள், தூய்மைப்பணியாளர்கள் உள்பட 17 பேருக்கு ஏற்கனவே கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவர்கள் திருப்பதியில் உள்ள அரச, ஸ்விம்ஸ் மருத்துவமனைகளில் சேர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதைத் தொடர்ந்து திருமலை – திருப்பதி தேவஸ்தானம் சார்பில் ஏழுமலையான் கோவில் உட்பட பல்வேறு துறைகளில் பணியாற்றும் ஊழியர்களில் தினமும் 100 பேருக்கு கொரோனா தொற்று பரிசோதனை செய்யப்பட்டது. அவ்வாறு செய்த பரிசோதனையில் பாலாஜிநகரில் வசிக்கும் பொதுமக்கள், தேவஸ்தான பாதுகாப்பு மற்றும் பறக்கும்படை அதிகாரி, உதவிப் பொலிஸ் அதிகாரி 4 பேர் உள்பட 14 பாதுகாப்பு மற்றும் பறக்கும்படை ஊழியர்கள், சமையலர் என 44 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இவர்களுக்குக் கொரோனாத் தொற்றுக்கான எந்த அறிகுறியும் இல்லை. அவர்கள் திருப்பதி ருயா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அதைத்தொடர்ந்து திருப்பதி, திருமலையில் கொரோனாத் தொற்று பரிசோதனையை அதிகரிக்க தேவஸ்தான அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். இதன் எதிரொலியாக திருப்பதி கோவிலில் நேற்று முதல் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருகிறது.

# ஹொங்கொங்கில் பாதுகாப்பு அலுவலகம் அதிரடியாக நிறுவியது சீனா அரசு!



சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் சீனாவின் புதிய தேசிய பாதுகாப்பு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

ஹொங்கொங்கின் சட்ட மற்றும் ஆட்சியமைப்பில் மாற்றங்கள் செய்வதற்கான, புதிய தேசிய பாதுகாப்புச் சட்டத்தைச் சீனா அண்மையில் நிறைவேற்றியது. ஹொங்கொங்கின் பாதுகாப்பு மற்றும் ஆட்சி அதிகாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள இந்தச் சட்டம் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது.

இதற்காகச் சிறப்பு அதிகாரிகளைக் ஹொங்கொங்கில் சீனா நியமனம் செய்துள்ளது. குறிப்பாகச் சீனாவின் தேசிய பாதுகாப்பு அலுவலகம் ஒன்று ஹொங்கொங்கில் ஏற்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், சீனா தேசிய பாதுகாப்பு அலுவலகம் ஒன்றைக் ஹொங்கொங்கில் திறந்து வைத்துள்ளது. ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் கேரி லேம் மற்றும் முக்கிய அதிகாரிகள் உட்பட்ட பால் இந்தப் புதிய அலுவலகத் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

சீனாவின் தன்னாட்சி பெற்ற பகுதியாக இருந்த ஹொங்கொங்கில் ஜனநாயகத்துக்கு ஆதரவாக நீண்ட காலமாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஹொங்கொங்கில் குற்ற வழக்கில் கைது செய்யப்படுபவர்களைச் சீனாவுக்கு நாடுகடத்தும் சட்டத்துக்கு எ ாகவும், ஜனநாயகச் சீர்திருத்தங்களை வலியுறுத்தியும், சீனாவுக்கு ஆதரவான ஹொங்கொங் அரசு பதவி விலக வலியுறுத்தியும் போராட்டங்கள் நடந்தன. இந்த நிலையில் சீஶ்ரீனா இது குறித்த புதிய சட்டத்தைத் தனது நாடாளுமன்றில் நிறைவேற்றியது.

அதை நடைமுறைப்படுத்தும் திட்டங்களைத் தற்போது முன்னெடுத்து வருகிறது. இந்தச் சட்டத்தால் ஹொங்கொங்கின் சுதந்திர சுயாட்சி முடிவுக்கு வந்து விட்டதாக பல ஜனநாயக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

## சீனா அதிகாரிகளுக்கு பயணக் கட்டுப்பாடு அமெரிக்கா அதிரடி



சீனாவின் முக்கிய அதிகாரிகளுக்கு நுழைவிசைவு வழங்குவதில் புதிய கட்டுப்பாடுகளைவிதிக்கவுள்ளோம் என்று அமெரிக்காவின் வெளியுறவுத்துறைச் செயலர்மைக்பாம்பியோ அறிவித்துள்ளார்.

இது குறித்து மைக் பாம்பியோதனதுகீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது:-

திபெத்துக்குச் செல்ல விடாமல் தடுக்கும் சீன நாட்டு அதிகாரிகளுக்கு நுழைவிசைவுக் கட்டுப்பாடுகளை விதித்து இன்று அறிவிப்பு வெளியிடுகிறேன்' என்றுள்ளார். தொடர்ந்து மைக் பாம்பியோ வெளியிட்டுள்ள அறிக்கையில், 'சீனாவின் தன்னாட்சி பகுதியாக இருக்கும் திபெத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் தொடர்ந்து அமெரிக்க அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், சுற்றுலாப்பயணிகள் செல்வதற்குச் சீனா அனுமதி மறுக்கிறது.

ஆனால், சீன அதிகாரிகள், சீன மக்கள் அமெரிக்காவுக்குள் சுதந்திரமாக வந்து, பல்வேறு வசதிகளை அனுபவிக்கிறார்கள்.

ஆதலால், திபெத் பகுதிக்குள் வெளிநாட்டினர், பத்திரிகையாளர்கள், அமெரிக்க மக்கள் நுழையத் தடை விதிக்கும் சட்டங்களை வகுக்கும் மற்றும் அதை நிறைவேற துணையாக இருக்கும் சீன அரச அதிகாரிகள், சீன கொம்யூ னிஸ்ட் கட்சி அதிகாரிகளுக்குத் திபெத் அணுகல் சட்டப்படி நுழைவிசைவு வழங்குவதில் கட்டுப்பாடு கொண்டு வருகிறோம். திபெத்திய மக்களுக்கு நியாயமான முறையில் சுயாட்சி கிடைக்க ஆதரவு வழங்குவோம்' என்று தெரிவித்துள்ளார்.

## ஹொங்கொங்கில் இருந்து வெளியேறியது 'டிக் டொக்'

### சீனாவின் சட்டத்தால் திடீர் நடவடிக்கை




ஹொங்கொங்கில் இயங்குவதை நிறுத்தியுள்ளது டிக் டொக் செயலி. ஹொங்கொங்கின் மீது அதிகாரத்தைச் செலுத்தும் வகையில் புதிய பாதுகாப்பு சட்டத்தைச் சீனா இயற்றியுள்ள நிலையில், அந்த பிராந்தியத்திலிருந்து வெளியேறுவதாக டிக் டாக் நிறுவனம் அறிவித்துள்ளது.

"சமீபத்திய நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு, ஹொங்கொங்கில் டிக் டொக் செயலியின் செயற்பாடுகளை நிறுத்த முடிவு செய்துள்ளோம்" என அந்த நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அடுத்த சில நாள்களில் ஹொங்கொங்கில் இருந்து டிக் டாக் நிறுவனம் வெளியேறும் என்று பன்னாட்டு ஊடகங்களும் செய்தி வெளியிட்டன.

டிக் டொக்

உலகளவில் பார்வையாளர்களைப் பெறுவதற்காகச் சிறு காணொலிகளைப் பதிவிடும் செயலியான டிக் டொக்கை, சீனாவைச் சேர்ந்த பைட் டான்ஸ் நிறுவனம் ஆரம்பித்தது.

டிக் டாக்கை போலச் சீனாவுக்குள் டூயின் என்ற செயலியையும் பைட் டான்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறது. அதன் உள்ளடக்கத்தைத் தணிக்கை செய்யவோ அல்லது தரவை அணுகவோ சீன அரசு கோரிக்கை வைத்தால் அதற்கு இணங்க மாட்டோம் என்றும், அவ்வாறு செய்யும்படி இது வரை யாரும் கேட்கவில்லை என்றும் டிக் டொக் நிறுவனம் கூறியிருந்தது.

தற்போது ஹொங்கொங்கில் இயற்றப்பட்டுள்ள பாதுகாப்பு சட்டம் மூலம் சீனாவுக்கு புதிய அதிகாரங்கள் கிடைத்துள்ளன. இதனால் தரவுகளின் தனியுரிமை பற்றிய அச்சங்கள் எழுந்துள்ளதால் டிக் டொக் அங்கிருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளது.

## முகக் கவசம் அணிவதில் பிரிட்டன் பின்னடிப்பு

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவாமல் தடுப்பதற்காக முகக் கவசம் அணிவதில் பிரிட்டன் பின்தங்கி உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா தொற்று மோசமாக பாதித்துள்ள 10 நாடுகளில் பிரிட்டன் 7ஆவது இடத்தில் இருக்கிறது. அங்கு 2 லட்சத்து 87 ஆயிரத்து 291 பேருக்குத் தொற்றுப் பாதிப்புள்ள நிலையில், 44 ஆயிரத்து 300க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுப்பதற்கு கட்டாயம் முக கவசம் அணிய வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் தொடங்கி உலகளாவிய மருத்துவ விஞ்ஞானிகள் வரையில் அறிவுறுத்தி வருகின்றனர்.

ஆனால் இதில் பிரிட்டன் மிகவும் பின்தங்கி இருப்பது அம்பலத்துக்கு வந்துள்ளது. இது குறித்து நோபல் பரிசு வென்ற விஞ்ஞானியும், கொரோனாவுக்கு எதிரான உலகளாவிய தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான பிரிட்டனின் உயர்மட்ட நிபுணர்கள் குழுவின் தலைவரும், றொயல் சொசைட்டியின் தலைவருமான பேராசிரியர் வெங்கடராமன் ராமகிருஷ்ணன் தெரிவிக்கையில், முக கவசம் அணிவதிலும், அதையொட்டிய தெளிவான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பொது மக்களுக்கு வழங்குவதிலும் பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் பிரிட்டன் மிகவும் பின்தங்கி உள்ளது என்று தெரிவித்தார்.



ஓமன் நாட்டின் எல்லையையொட்டியுள்ள அல் அய்ன் பகுதியில் மலகத் என்ற இடத்தில் அல் சார என்ற 100 ஆண்டுகள் பழமையான மரம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மரம் பாறைகளுக்கு இடையே வளர்ந்துள்ளது. பொதுவாக இந்த வகை மரம் ராசல் கைமா பகுதியில் மட்டுமே வளரக் கூடியது. அல் அய்ன் பகுதியில் வளர்ந்துள்ள இந்த மரம் குறித்த தகவல் நீண்ட காலமாகத் தெரியாமல் இருந்துள்ளது.

## ஒரே நாளில் உலட்சம் கொரோனா உச்சம்!

உலகம் முழுதும் 1 கோடியே 19 லட்சத்து 57 ஆயிரத்து 736 பேருக்குக் கொரோனா பரவியுள்ளது.

குறிப்பாக நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 2 லட்சம் பேருக்குப் புதிதாகக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டவர்களில் 44 லட்சத்து 92 ஆயிரத்து 954 பேர் சிகிச்சை பெற்று வருகிறனர். சிகிச்சை பெறுபவர்களில் 58 ஆயிரத்து 196 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. வைரஸ் பாதிப்பில் இருந்து 68 லட்சம் பேர் குணமடைந்துள்ளனர். ஆனாலும், கொரோனாவால் இது வரை 5 லட்சத்து 45 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 30லட்சத்து 97ஆயிரத்து 84 பேருடன் அமெரிக்கா முதலிடத்திலும், 16லட்சத்து 74 ஆயிரத்து 665பேருடன் பிறேசில் இரண்டாவது இடத்திலும் 7லட்சத்து 46 ஆயிரத்து 4பேருடன் இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir

# ராஜபக்ஷக்களின் ஆட்சியில் சமஷ்டிக்கு இடமேயில்லை!

## அடித்துக் கூறுகின்றார் லக்ஸ்மன் யாப்பா

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் கோருவது போன்று ராஜபக்ஷ அரசு ஆட்சியில் இருக்கும் வரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமஷ்டிக்கு இடமளிக்காது.

-இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர்லக்ஸ்மன்யாப்பாஅபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மக்களுக்குத் தேவையான அபிவிருத்திகளுக்கான தீர்வைத் தேடுவதற்கு அப்பால அதிகாரப் பகிர்வுக்கான தீர்வைத் தேடுவதாயின் எப்போதும் தமிழர்களுக்கான தீர்வு கிடைக்காது எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டைப் பிளவுபடுத்தும் எந்தவொரு புதிய நடவடிக்கைக்கும் இந்த அரசு இணங்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தெற்கிலுள்ள மக்களுக்கும் வடக்கிலுள்ள மக்களுக்கும் சமமான முறையில் மகிழ்ச்சியை வழங்கக்கூடிய வகையிலான தீர்வுக்கு மாத்திரம் செல்வோமோ தவிர ஒரு தரப்பினர் மாத்திரம் மகிழ்ச்சியடையக்கூடிய தீர்வுக்குச் செல்லமாட்டோம் எனவும்



அவர் மேலும் கூறியுள்ளார்.

# சுற்றிவளைப்புகளில் 1,885 பேர் மாட்டினர்!

கடந்த 06ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் மறுநாள் 07ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரையான 24 மணித்தியால காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 1,885 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள், ஆயுதங்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 297 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த 782 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 260 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 163 பேரும், ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 05 பேரும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 367 பேரும் கைதுசெய்யப்பட்டுள் ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளில் 06 உள்நாட்டுத் துப்பாக்கிகளும், 3 ஆயிரத்து 310 லீற்றர் சட்ட விரோத மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# பஸ்ஸுக்குள் பெண் மீது தாக்குதல்: பிக்கு ஒருவர் பொலிஸாரால் கைது!.

அம்பலாங்கொட பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸுக்குள் வைத்துப் பெண்ணைத் தாக்கினார் எனக் கூறப்படும் பௌத்த பிக்கு ஒருவர் கைதுசெயப்பட்டுள்ளார்.

அளுத்கம நோக்கிப் பயணிக்கத் தயாராக இருந்த பஸ்ஸில் வைத்தே குறித்த பெண் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது என அம்பலாங்கொடப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான பெண் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் கொபல்லவ விஜித என்ற 72 வயதுடைய பிக்கு எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

பாதிக்கப்பட்ட பெண் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய குறித்த பிக்கு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## தமிழரின் உரிமைகளை .....

(08ஆம் பக்கம் பார்க்க)

1956ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களால் வழங்கப்பட்ட ஜனநாயக ரீதியான தீர்ப்புகள் மதிக்கப்பட வேண்டும். அது என்னவென்றால், ஆட்சி முறையில் மாற்றம் ஏற்பட்டு அதி யுச்ச அளவில் அதிகாரங்கள் பகிந்தளிக்கப்பட்டு மக்கள் தங்களுடைய கருமங்களைக் கையாளக்கூடிய அரசியல் சாசன ரீதியாக உலகத்தில் பல நாடுகளில் நிலவுகின்து போல் ஒரு ஆட்சி முறை ஏற்படவேண்டும் என்பதே. இதனை எவராலும் உதாசீனம் செய்ய முடியாது.

இலங்கை அரசின் சம்மதத்துடன் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற் றப்பட்ட அரசியல் குடியியல் உரிமைகளின் அடிப்படையிலும், பொருளாதார சமூக கலாசார உரிமைகளின் அடிப்படையிலும் ஒரு மக்கள் குழாமுக்கு உள் ளக சுயநிர்ணய உரித்து உள்ளது. இவையெல்லாவற்றையும் இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

இவற்றை நிறைவேற்ற வேண்டியது இலங்கை நாட்டினதும் அரசினதும் கடமையாகும். இவை மறுக்கப்படுகின்ற போது விளைவுகள் பாதகமாக அமையலாம்.

ஒரு நீண்டகால கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பின்பற்றி வருகின்ற தமிழ் மக்களுடைய உரிமைகள் எவராலும் இலகுவாக நிராகரிக்கப்பட முடியாதவையாகும். இதனை மிகவும் உறுதியாக வலியுறுத்த விரும்புகின்றோம் - என்றுள்ளது.

## சிவாஜிக்கு எதிரான மனு.....

(08ஆம் பக்கம் பார்க்க)

புலனாய்வுத் தகவல் கிடைத்தது என்றும், அவர் தேங்காய் உடைத்து ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளதாக அந்தத் தகவல் மேலும் தெரிவித் ததாகவும் பொலிஸ் தரப்பினர் நீதிமன்றில் தெரிவித்திருக்கின்றனர்.

இதனை சிவாஜிலிங்கம் தரப்பு சட்டத் தரணி முற்றாக நிராகரித்ததுடன், வழிபடுதல் என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட உரிமை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

இதனை அடுத்து, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்த நீதிபதி, சிவாஜிலிங்கம் வழிபாட்டில் ஈடுபடுவது அவருடைய தனிப்பட்ட உரிமை என்று தெரிவித்து தடை செய்யும் கோரிக்கையை நிராகரித்தமையுடன், பொலிஸார் குறிப்பிட்டமை போன்று ஆர்ப்பாட்டம் மேற்கொண்டால் கைது செய்வதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுப்பர் என்றும் தெரிவித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த போது விமானக் குண்டுத் தாக்குதலில் 150 பேர் வரை கொல்லப்பட்டதன் இருபத்தியைந்தாவது நினைவு தினம் நாளை என்பது குறிப்பிடத்தக்கது.

# கோணேஸ்வரத்தை கோகர்ண விகாரை என்பதா? மேதானந்தர் மீது பாய்கின்றார் சு.கவின் அங்கஜன்



திருகோணமலை கோணேஸ்வரம் ஆலயம் பற்றி வணக்கத்துக்குரிய எல்லாவல மேதானந்த தேரரின் சர்ச்சைக்குரிய கருத்துக்கு முன்னாள் விவசாயத் துறை பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருஞானசம்பந்தப் பெருமான் பதிகம் பாடிய பெருத்தலத்தை அவமதித்தமையை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்து மக்களின் வரலாற்று தொன்மைமிக்க வழிபாட்டுக்கு எடுத்துகாட்டாக விளங்கும் பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரஆலயத்தைகோகர்ண விகாரை எனக் கிழக்கு தொல்பொருள் செயலணியின் உறுப்பினரான எல்லாவல மேதானந்த தேரர் கருத்து வெளியிட்டமையை ஏற்று கொள்ள முடியாதென ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கி.பி.7ஆம்நூற்றாண்டில்வாழ்ந்த திருஞானசம்பந்த பெருமான் தேவாரப் பதிகம் பாடிய திருத்தலமாக இந்த ஆலயம் விளங்குவதோடு இலங்கையை ஆண்ட தமிழ் மன்னான இராவணன் சிவபூஜை செய்த திருத்தலமாகவும் இந்த ஆலயம் வரலாற்றில் இடம்பிடித்திருக்கிறது. சுமார் 2000 வருடங்களுக்கு மேற்பட்ட தமிழர்களின் தொல்பொருள் ஆய்வுகளின் புகலிடமாக விளங்குகின்ற வெடுக்குநாறி, செம்மலை, நீராவியடி, அரிசி மலை, திரியாய், கன்னியா, மத்தலவள முதலான 15 பிரதேசங்களை உள்ளடக்கி கதிர்காமம் வரை தமிழர்களின் புராதான அகழ்வாராய்சி பகுதிகள் நீண்டு கொண்டே செல்கின்றன.

இந்நிலையில் தமிழர்கள் புராதன பகுதிகளை அகழ்வாராய்ச்சி மேற்கொள்வதாகக் கூறி, பௌத்த வரலாற்றுச் சிதைவுகளை உட்சேர்க்கும் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை வருத்தம் அளிக்க கூடியதாக உள்ளது.

ஆகவே மனிதனின் செம்மையான வாழ்க்கை தத்துவங்களையும் வழிபாட்டு முறைகளையும் கற்று கொடுக்கும் மதங்களின் பெயரால் ஓர் மதத்தவரை இன்னோர் மதத்தவர் வருத்தும் அளவிற்கு இந்தத் தேரர் நடந்துகொள்வதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு பாசிக்குடாவில் உடற்பிடிப்பு நிலையத்தில் தீ!



மட்டக்களப்பு பாசிக்குடாவிலுள்ள உடற்பிடிப்பு நிலையம் (Spa) ஒன்றில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்கிழமை) இரவு திடீரென ஏற்பட்ட தீயினால் கட்டடம் ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

தீயினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் மட்டக்களப்பு நகர சபை தீயணைப்பு படையினர், கல்குடா பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து ஈடுபட்டனர். இதனால் தீயானது மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது.

தீ பரவியமைக்கான காரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத் தீயினால் அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பொருள்கள் சில தீயில் எரிந்துள்ளன. இத் தீ விபத்தினால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லையென பொலிஸார் மேலும் தெரிவித்தனர். தீ பரவலைத் தொடர்ந்து பிரதேசத்தில் சற்று நேரம் பதற்ற நிலை ஏற்பட்டது.

# கால் நூற்றாண்டில்

# நவாலிக் கொடூர நினைவழியா நாள்!

- செல்வராஜா ரமேஸ் -



ஒரு சில நிமிடங்களில் துடிதுடித்து மடிந்தனர் எம் உறவுகள் 147 பேர்.

நவாலி தாக்குதல் இடம் பெற்று இன்றுடன் கால் நூற்றாண்டு ஆகின்றது.

வரலாற்றில் 09.07.1995 இல் இடம்பெற்ற - இரத்தக்கறை படிந்த - கோரக் கொடூரமான இந் நிகழ்வைத் தமிழர்களால் என்றும் மறக்க முடியாது.

முன்னாள் ஆட்சியாளர்களின் பணிப்புரையின் போல் நடாத்தப்பட்ட விமானத் தாக்குதலில் பலியெடுக் கப்பட்ட எம் உறவுகளின் கால் நூற்றாண்டு நினைவு நாளை 2020 இல் நாம் ஒரு கணம் மீண்டும் எம் உறவுகள் மத்தியில் மீட்டுப் பார்க்கின்றோம்.

இந்தக் கொடுமையான நவாலி சென் பீற்றர்ஸ் ஆலயப் பலியெடுப்பு சர்வதேச சமூகத்தையே மிக வும் மனவருத்தத்திற்கு உள்ளாக்கியதுடன் மக்களை சொல்லொணா துயரத்திற்கும் இட்டுச்சென்றது.

கடந்த 09.07.1995 - தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றில் நவாலியில் இரத்த ஆறு ஓடிய ஒரு கோரமான கொடிய நாளாகும். அன்றுதான் நவாலி சென்றபீற்றா தேவாலயம் மற்றும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் (சின்னக்கதிர்காமம்) ஆலயம் என்பன அழிந்து அப்பாவிகளான 147 மக்களை காவு கொண்ட கரிநாள்.

வலிகாமம் பூராகவும் இடம்பெற்ற வான் தாக்கு தலில் அதிர்ந்து கொண்டிருந்த வேளையில், மாலை நேரத்தில் இடம்பெயர்ந்து கொண்டிருந்த போது விமானப்படையினரால் நடத்தப்பட்ட மிலேச் சத்தனமான தாக்குதல் ஓர் மோசமான இனப்படு கொலையாகும்.

யாழ். மாவட்டத்தின் வலிகாமம் தென்மேற்கின் நவாலியூரில் இடம்பெற்ற இந்த இரத்தக்கறை படிந்த நாள் பலியெடுப்பு நிகழ்வுகளை தமிழினம் என்றும் மறக்காது, மறக்கமுடியாது என்று அன் றைய நிகழ்வை ஒட்டி லண்டன் பி.பி.சி. தமிழோசை நிறுவனம் செய்தி வெளியிட்டது.

'முன்னோக்கிப் பாய்தல்' (லீப்போர்வேட்) எனப் பெயர் கொண்ட இராணுவ நடவடிக்கையை வலி காமம் பகுதியில் தொடங்கிய இராணுவத்தினர் பலா லியில் இருந்தும் அளவெட்டியில் இருந்தும் மிக கொடூரமான முறையில் செல் தாக்குதல்களையும் பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களையும் தொடர்ச்சி யாக மேற்கொண்டிருந்தனர்.

திடீரென 09.07.1995 அன்று வலிகாமம் தென் மேற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்குப்பகுதிகளில் உள்ள மக்கள் குடி யிருப்புக்கள், ஆலயங்கள், பொதுநிலையங்கள், அரச மற்றும் பொது நிறுவனங்களை நோக்கி காலை 5.20 மணியளவில் இருந்து விமானத்தாக்குதல் களும் செல்தாக்குதல்களும் தாறுமாறாக பாரிய சத்தங்களுடன் நடத்தப்பட்டன.

அவ்வேளையில் சகல வீதிகளிலும் ஹெலிக் கொப்டர்கள் தாக்குதல்களும்,அகோரமான செல் தாக்குதல்களாலும் தொடர்ந்தன. அவற்றுக்கு மத்தி யில் காயப்பட்டவர்களை, உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்களை, காயமடைந்து இரத்தம் சிந்திக்கொண்டிருந்தவர்களை வைத்தியசாலைக் குக் கொண்டு செல்ல வாகனங்கள் இருக்கவில்லை. வாகனங்களை இயக்குவதற்கான எரிபொருள்க ளும் அற்ற - பொருளாதாரத் தடை மோசமாக நீடித்த




- காலப்பகுதியாகும்.

இதே நேரம் காயமடைந்தவர்கள் ஏதோ ஒரு வழியின் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டால் அவர் களை காப்பாற்ற மருத்துவர்களோ வைத்தியசாலை களோ இயங்க முடியாத அவல நிலை.

வைத்தியசாலைகளிலும் மருந்துகளோ வைத் தியாகளோ இல்லாத சூழலே காணப்பட்டது.

இறுதியில் காயமடைந்தவர்கள் சிகிச்சையின்றி இறந்த நிகழ்வுகள் தாராளமாக அரங்கேறியமை யை இலகுவில் மறக்க முடியாது.

அன்றைய தினம் குடாநாட்டின் பல்வேறு வீதி களின் ஊடாக நவாலி சென் பீற்றர்ஸ் ஆலயத்தி லும் நவாலி சின்னக்கதிர்காம முருகன் ஆலயத்தி லும் தாகம் தீர்ப்பதற்காக மக்கள் நூற்றுக்கணக்கில் அமர்ந்து களைப்பாறினர்; படுத்துறங்கினர்.

அவ்வேளைகளில் யாழ் நகரப்பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்து கொண்டிருந்த விமானம் தொடர்ச்சியாக 13 குண்டுகளை தான்தோன்றித் தனமாக பிற்பகல் 4.47 மணியளவில் மக்கள் ஒன்று கூடியிருந்த மேற்குறித்த இரு ஆலயங்கள் மீதும் வீசின. அவ்வளவுதான். நவாலி கிராமம் ஒரு கணம் அதிர்ந்தது. வீதி கள் தடைப்பட்டு, மரங்கள் முறிந்து வீழ்ந்து, அலறல் சத் தங்கள் ஓங்கி ஒலிக்க, வீடு கள், கட்டடங்கள் தரைமட்ட மாகி, மதில்கள் வீழ்ந்து சரிய, எங்கும் மனித இரத்த வாடை யுடன் கந்தகப் புகை பரவி யது. எங்கும் சதைக் குவிய லும் பிணக்கும்பலுமாக மன தை அதிர வைக்கும் கோரக் காட்சி.

குடாநாட்டின் பல்வேறு இடங்களை சேர்ந்த சுமரா 147 பேர் ஒரு சேர அந்த இடத் திலேயே பலியானார்கள்.

இச்சம்பவத்தில் கையி ழுந்து, கால்இழந்து தலையி ழுந்து, உடல் சிதறி உயிரிழந்தோரையும், குற்று யிராகக் கிடந்தவர்களையும் இலகுவில் மறந்துவிட முடியாது.

சுமார் 360 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பலர் சிகிச்சை அளிக்கப்படாத நிலையில் நீண்ட நேரம் இரத்தம் சிந்தி உயிரிழந்தமை தொடராக நிகழ்ந்த மற்றோர் அவலம்.

இடம்பெயர்ந்து வந்த பொது மக்களுக்கான சேவையில் அச்சமயம் பங்கு கொண்டிருந்த வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகர் பிரி வைச் சேர்ந்த கிராம அலுவலர் (ஜே 134) செல்வி. ஹேமலதா செல்வராஜாவும், சில்லாலைப் பிரிவு சிரேஷ்ட கிராம அலுவலரான பிலிப்புப்பிள்ளை கபி



ரியேல்பிள்ளை ஆகியோர் மக்கள் சேவையின் போது அந்த இடத்திலேயே பலியான அரச சேவையா ளர்கள்.

அன்றைய தினம் மக்கள் தொண்டுப்பணியில் ஈடுபட்டு உணவு ,குடிதண்ணீர் வழுங்கிக் கொண் டிருந்த 48 தொண்டர்களும் அந்தந்த இடத்தில் துடிதுடித்து உயிரிழந்தமை மறக்க முடியாது.

இவற்றை நினைவு கூரும் முகமாக இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் நவாலி சென் பீற்றர்ஸ் ஆலயத்தில் விசேட திருப் பலிப்பூசையும் வெளிச்சுற்றுப் பிரகாரத்தில் நினைவு நிகழ்வுகளும் இறந்தோர் ஞாபகார்த்தமாக கருங் கல்லில் நினைவுக்கல் திரை நீக்கமும் தீப்பந்தம் ஏந்தும் நிகழ்வும் இந்த 25 ஆம் ஆண்டு நிறைவில் இடம்பெறவுள்ளன.

இன்றைய தினம் முற்றாக அழிவடைந்த நவாலி சின்னக்கதிர்காம் கந்தன் ஆலயத்திலும் ஆலய பிரதம குரு சிவத்திரு மாரிமுத்து பத்மநாதன் தலை மையில் காலையிலும் மாலையிலும் 25 ஆவது ஆண்டினை நினைவு கூர்ந்து 25 ஒளி விளக்கேற்றி விசேட வழிபாடுகளும் இடம்பெறும்.

மேற்படி 1995.07.09 ஆம் திகதி படுகொலை தொடாபாக நவாலி வடக்கு புலவா வீதியிலும் நவாலி சென் பீற்றர்ஸ் ஆலய வீதியிலும் அமைக்கப்பட் டுள்ள நினைவுச் சின்னங்களில் ஒளியேற்றி மக்க ளால் நினைவு கூரப்படும் சிறப்பு நிகழ்வு இடம் பெறும்.

காலைக்கதிர் Kalaikkathir

## கிழக்கு தொல்பொருள் செயலணிக்கு

# சிறுபான்மைப் பிரதிநிதிகள் இருவரைப் பரிந்துரைக்குக!

### டக்ளஸுக்குக் கோட்டா பணிப்பு



கிழக்கு மாகாணத்தில் காணப்படும் தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளை இணைத்துக்கொள்வதற்காகப் பிரதிநிதிகள் இருவரின் பெயர்களை செயலணிக்கு வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரியுள்ளார்.

கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியின் உறுப்பினர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தது. ஏற்கனவே நியமிக்கப்பட்ட கிழக்கு தொல்பொருள் செயலணியில் சிறுபான்மையினர் எவரும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, இந்த விடயம் அரசியல் ரீதியில் சர்ச்சையை உருவாக்கியிருந்தது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயத்தை அமைச்சர் டக்லஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியிருந்ததுடன் ஜனாதிபதிக்குக் கடிதமும் அனுப்பியிருந்தார். இந்தக் கடிதத்துக்குப் பதிலளித்திருந்த ஜனாதிபதி இரு சிறுபான்மையினரை இணைத்துக்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார்.

ஆனால், நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலில் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் மட்டுமே வெளியாகியிருந்தன. இந்தநிலையில் நேற்றுக் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின்போதும் இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுசென்றிருந்தார். அதையடுத்து குறித்த பிரதிநிதிகளின் பரிந்துரைகளைத் தமக்கு வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரியுள்ளார்.

## 56 கிலோ கஞ்சா பொதியுடன் முல்லேரியாவில் ஒருவர் கைது

விநியோகத்திற்கு தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த 56 கிலோ கிராம் கஞ்சாவுடன் முல்லேரியா களனி நதி வீதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படை தலைமையகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களுக்கமைய இந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில் முல்லேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கம் எமக்கு இல்லை

### மஹிந்தவுக்கு சஜித் அணி பதிலடி



ஒற்றையாட்சிக்குள் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரங்களைப் பகிர்வதே சஜித் பிரேமதாஸவின் நிலைப்பாடாக இருக்கின்றது. மாறாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறுவதுபோல் நாட்டைப் பிளவுபடுத்தும் எந்தவொரு நோக்கமும் இல்லை.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது நிலைப்பாட்டை சஜித் பிரேமதாஸ மிகவும் தெளிவாக அறிவித்துள்ளார். அதாவது ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களைப் பகிர்வதே அவரின் வேலைத்திட்டமாக இருக்கின்றது. எனவே, நாட்டைப் பிளவுபடுத்தும் செயலையோ அல்லது பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கையையோ அவர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பிலுள்ள விடயமாகும். அதனை நடைமுறைப்படுத்துவதை சட்ட விரோத நடவடிக்கையாகக் கருதமுடியாது. மாகாண சபைகள் சுதந்திரமாக இயங்குவதற்கு உள்ள தடைகள் நீக்கப்பட வேண்டும். அதனை இந்த அரசு செய்திருக்கலாம். அதனைச் செய்யாமல் எம்மை நோக்கி விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது. அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல - என்றார்.

## விலகினார் போகொல்லாகம

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் மற்றும் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் பொறுப்புகளில் இருந்து தாம் விலகுகிறார் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் கடிதம் ஊடாக அறிவித்துள்லார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அல்வாயில் வீடு எரிந்து நாசம்

பருத்தித்துறை, ஜூலை 09

அல்வாய் கிழக்கு நாச்சிமார் கோவிலடியில் நேற்று மாலை வீடொன்று தீப்பற்றி எரிந்து முற்றாக சேதமடைந்துள்ளது. வீட்டிலிருந்த அனைத்து உடமைகளுமே எரிந்து நாசமாகின. வீடு தீப்பற்றி எரிந்தமைக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.

## கொரோனாவின் 2ஆம் அலையை பொதுமக்களே தடுக்க வேண்டும்!



கரு ஜயசூரிய அறிவுறுத்து

வெலிக்கடை சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டிருக்கும் நிலையில், மக்கள் தமது அனைத்துவித செயற்பாடுகளையும் உயர் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை ஏற்படுவதைத் தடுக்கும் பொறுப்பு பொதுமக்களுக்கும் இருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள கைதி ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளமையையடுத்து அங்கு கைதிகளைப் பார்வையிடுவதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சிறைச்சாலையிலும் கந்தக்காட்டிலுள்ள போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் நிலையத்திலும் பலரைத் தனிமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை ஏற்படுவதைத் தடுப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என்று சுட்டிக்காட்டியுள்ள கரு ஜயசூரிய, இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது சிறைக்கைதி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால், அனைத்துச் செயற்பாடுகளின் போதும் மக்கள் உயர் சுகாதாரப் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

அவ்வப்போது கைகளைக் கழுவுவதும், முகக்கவசம் அணிவதும் வெறுமனே கட்டாயத்தின்பேரில் செய்கின்ற ஓர் சடங்கு போன்று இருக்கக்கூடாது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை ஏற்படுவதைத் தடுப்பது அரசுக்கும் மக்களுக்குமான பொதுவான பொறுப்பாகும் - என்றார்.

## பருத்தித்துறை பஸ்ஸில் கிடந்த 50 மதுப் புட்டிகள்

பருத்தித்துறை,ஜூலை09

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் தரித்து நின்ற இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் இருந்து 50 காற்போத்தல் அளவு கொண்ட சாராய போத்தல்களின் பொதி பருத்தித்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 8.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து கட்டைக்காடு செல்வதற்காக பருத்தித்துறை பஸ் நிலையத்தில் தரித்து நின்ற பஸ்ஸின் பின்புற ஆசனத்தில் சந்தேகத்துக்கிடமான பொதி ஒன்று இருப்பதைக் கண்ட நடத்துநர் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பருத்தித்துறை பொலிஸார் 50 சாராய போத்தல்கள் கொண்ட பொதியை எடுத்துச் சென்றனர்.

இனந்தெரியாத நபரினால் மேற்படி பொதி வைக்கப்பட்டிருக்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் காரணமாக 8.30க்கு புறப்பட்ட இருந்த பஸ் ஒரு மணி நேர தாமதத்தின் பின்னர் பயணத்தை தொடர்ந்தது.

மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இனவாத, மதவாத அரசின் அரசமைப்பை குப்பைக்கூடைக்குள் வீசவேண்டும் மக்கள்

### மங்கள வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 09

இனவாத, மதவாதக்காரர்களை வைத்துக்கொண்டு அரசு அரசமைப்பைத் தயாரித்தால் அல்லது திருத்தியமைத்தால் அதனைக் குப்பைக் கூடைக்குள் நாட்டு மக்கள் வீசவேண்டும்.

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டு அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மாற்றியமைக்கப்போவதாக ஆளுந்தரப்பினர் கூறிவரும் நிலையிலேயே மங்கள சமரவீர இத்தகைய கருத்தை வெளியிட்டுள்ளார்.

மதகுருமார்களையும், அடிப்படைவாதிகளையும் இணைத்துக் கொண்டு அரசமைப்பைத் தயாரித்த நாடுகளுக்கு நேர்ந்த கதியை மறந்துவிடக்கூடாது. அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அவற்றைக் குப்பைக்கூடைக்குள் வீசியெறிவதே இலங்கையர்களின் பொறுப்பாகும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## யாழில் 7...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருவிச்சை இருந்தால், குருவிச்சையை மட்டும் வெட்டி விடுங்கள். மரத்தையே வெட்டி விடாதீர்கள் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த ஊடக மையத்தில் இருந்துதான் மூத்த போராளி பசீர்காக்கா பேட்டியளித்தார். அதை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் எல்லா பத்திரிகைகளும், ஊடகங்களும் வெளியிட்டன. உதயன் மட்டும்தான் வெளியிட்டது என்றல்ல. ஊடக சுதந்திரம், கருத்து சுதந்திரத்தில் சட்டத்திற்குட்பட்டு சரியாக செயற்பட்டால் யாருக்கும் பயமின்றி செயற்படலாம். 36 வருட எனது பத்திரிகை வரலாற்றில், செய்திகளை வெளியிடுவது பற்றி ஆசிரியர் பீடம் என்னுடன் கலந்துரையாடியதில்லை. நானும் அதில் தலையிட்டதில்லை. இந்த இடத்தில் அதை முக்கியத்துவப்படுத்தியவரிடம்தான் கேட்க வேண்டும். ஊடக மையத்தில் பேசிய ஒன்று எல்லா பத்திரிகைகளிலும் வரும். அப்படித்தான் உதயனிலும் வந்தது. நல்லது மட்டும் வந்தால் ஏற்றுக்கொள்வதும், விமர்சனம் வந்தால் அதைப்பற்றி காரணம் கற்பிப்பதும் முதிர்ச்சியனதல்ல. செய்தி தவறானதென்றால், அதை அணுகப் பல வழிகளுண்டு.

நிதி நிறுவனமொன்றுடன் என்னை தொடர்புபடுத்தி டக்ளஸ் தேவானந்தா முன்னர் சொன்னதை இப்போது சிலர் காவித் திரிக்கிறார்கள். டக்ளஸ் தேவானந்தா அதைப்பற்றி சொன்னபோது, படித்தவர்கள் பேசினால் அதைப்பற்றி விளக்கமளிக்கலாமெனபேசாமல் இருந்துவிட்டேன். இப்போது சில 'தவ்வல்கள்' அதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதன் உண்மைத்தன்மை தெரிய வேண்டுமெனில் உரிய நிறுவனங்களைதொடர்பு கொண்டு தகவலறியலாம். அரசியல்வாதியாக இருப்பதால் இப்படியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகிறது.

நாம் மக்களால் தெரிவானவர்கள். நடந்த சம்பவங்கள் பற்றி மக்களிடம் சொல்லும்போது மிக அவதானமாக இருக்க வேண்டும். ஒரு விடயத்தை சொல்லிவிட்டு, பிறகு அதற்கு விளக்கமளிக்க முயல்வதும் ஆரோக்கியமானதல்ல. நாம் ஆயுதமேந்தியது, எமக் கெதிரான வன்முறைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ளவே. நாம் ஓரளவு வெற்றியடைந்தோம் என்றால், அது ஆயுதப் போராட்ட காலத்திலேயே. இந்தப் போராட்டத்தில் பல பேர் தம்மை அர்ப்பணித்துள்ளார். இந்த அர்ப்பணிப்பிற்கு நாம் இன்னும் அர்த்தம் கற்பிக்க வேண்டுமே தவிர, அதை அலசி ஆராய்ந்து கொண்டிருப்பதல்ல.

இன்று ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அரங்கில் எமது பிரச்சினை பேசப்படுகிறதென்றால், அதற்கு ஒரே காரணம் ஆயுதப் போராட்டமே. மக்களிடம் கருத்து சொல்லும்போது நாம் முதிர்ச்சியாகக் கருத்து சொல்ல வேண்டும். கரும்புலிகள் தினத்தில் அஞ்சலி செலுத்துவதைத் தடை செய்ய முயற்சிப்பது, புலி நீக்க அரசியலை செய்வதற்காகத்தான்.

இம்முறை யாழ்ப்பாணத்தில் 7 ஆசனங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கைப்பற்றும். உள்ளுக்குள் சில உரசல்கள் நடந்தாலும், இலக்கில் நாம் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றோம். ஐ.தே.கவில் இருந்த வாக்குகள் இரண்டாகப் பிரியும். சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அதிகம் செலவழித்துக் கொண்டிருக்கின்றார். அவர்களின் வாக்கை சுதந்திரக் கட்சி, டக்ளஸ், வாசுதேவவின் கட்சி ஆகியன பங்கிட வேண்டும்.

விக்னேஸ்வரனின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதால், அங்குதான் சிறிய உடைவு வரும். அது பெரிய பாதகமல்ல. வீட்டுக்கு வாக்கிடுபவர்களின் மனநிலை மாறாது. இம்முறை 7 ஆசனங்களையும் நாம் கைப்பற்றுவோம் என்பது என் கணிப்பு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலி நீக்க அரசியல் செய்யவில்லை. சில நடைமுறைகள் அப்படியொரு எண்ணத்தை கொண்டு வந்து விட்டன. எல்லோருமல்ல. அது ஒருவர். ஒரு மரத்தில் குருவிச்சை இருந்தால், குருவிச்சையை மட்டும் வெட்டிவிடுங்கள். மரத்தை வெட்டக்கூடாது. – என்றார்.

நாங்கள் எதற்கு அரசியற் தீர்வுக்காக எங்களை நாளும் பொழுதும் அர்ப்பணித்தக் கொண்டிருக்கின்றோமோ அந்தத் தேவை எங்களது உரிமை. உரிமைகள் பெறப்படவேண்டும். உரிமைகள் பல விதத்தில் உண்டு. தனியே எங்களுடைய மொழி, இனம், என்றில்லாமல் பல விடயங்கள் உள்ளன. இதில் முதலாவதாகப் பொருளாதாரம் அடக்கப்பட்டிருக்கின்றது. அடுத்ததாக கலாசாரம், கல்வி, சுகாதாரம், விளையாட்டு என இப்படியே சொல்லிக் கொண்டே போகலாம்.

கடந்த காலங்களில் இந்தப் பேரினவாத அரசு எல்லாவற்றையும் அடக்கி ஒடுக்கியது. ஆயினும் எங்களுடைய அரசியல் உரிமைக்காக ஆயுதப் போர் நடந்து கொண்டிருக்கின்ற காலப் பகுதிகளில் அப்படியே எல்லாவற்றையும் தமிழர்களுக்கு கிடைக்காமல் செய்துவிட்டார்கள். தமிழர்கள் நாங்களும் எங்களுடைய ஆதரவை ஆயுதப் போராட்டத்திற்கு கொடுத்துக் கொண்டிருந்தோம். அதேவேளையில் எங்களுக்கு எந்த விதமான பொருளாதாரத்தையோ, கல்வியையோ வளர்க்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

ஆயுதப் போராட்டத்தைப் புலிகள் நடத்தும்போது சமாந்தரமாக பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவை வைத்திருந்தார்கள். அதனூடாகப் பல அபிவிருத்திகள் செய்யப்பட்டன. அங்கே நிழல் நிர்வாகம் இருந்தது. எல்லாவற்றுக்கும் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. இந்த விதத்தில் நாங்கள் பார்க்கின்றபோது மக்களுக்காக அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லவேண்டும். அபிவிருத்தியை பேசவேண்டுமென்று சொல்கின்ற போது இணக்க அரசியலைத்தான் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை.

மக்களுடைய அபிவிருத்தியைப் பற்றி பேசும்பொழுது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வது எங்களுடைய கடமை. அது கல்வியோ, சுகாதாரமோ, விளையாட்டோ எதுவாக இருந்தாலும் நாங்களாகவே கட்டமைப்பை ஏற்படுத்தி வளர்க்க வேண்டும். அந்தக் கட்டமைப்பை ஏற்படுத்த அரசுகள் விடவில்லை. குறிப்பாக இவ்வாறான கட்டமைப்பை ஏற்படுத்த நிதி தேவை. அந்த நிதியைக் கூட மாகாண சபை முதலமைச்சர் நிதியத்தினூடாகக் கொண்டு வருவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அரசு எங்களுக்கு எதனையும் கொடுக்கவில்லை. இவற்றுக்கு எதிராக நாம் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்துப் போராடத்தான் வேண்டும்.

### புதிய அரசமைப்பு

அரசமைப்பு சம்பந்தமாக வரைவொன்று தயாரிக்கப்பட்டு அது குறித்தான விவாதம் நடைபெற இருந்த நிலையில் ஏற்படுத்தப்பட்ட தடங்கலால் அதுவும் இல்லாமல் போய்விட்டது. அதேபோல முன்னர் சந்திரிகா, பின்னர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண போன்றோரும் அரசியற் தீர்வு குறித்தான நடவடிக்கைகளை முன்கொண்டு வந்தபோதும் அவையும் தடைப்பட்டன. ஆகவே எமக்கான தீர்வு கிடைக்கத் தொடர்ந்தும் நாம் செயற்பட வேண்டும்.

இப்போது நாங்கள் அரசின் அனுசரணையுடன்தான் அபிவிருத்தி செய்யலாம். ஏனெனில் பாரியளவு நிதி அபிவிருத்திக்குத் தேவைப்படுகிறது. கடந்த ஆட்சியில் எங்களுடைய முழு முயற்சியினால்தான் நிதி ஒதுக்கினார்கள். அது 400 மில்லியன் ரூபா ஒதுக்கிய போதும் 300 மில்லியன் ரூபா கிடைத்தது. அதில் அபிவிருத்தி செய்யப்பட்டது. மேலும் விசேட நிதிகள் ஊடாகவும் நாங்கள் அபிவிருத்தியைச் செய்திருக்கிறோம்.

### அபிவிருத்தியும் அவசியம்

மேலும் இதேபோன்ற அபிவிருத்திகளைச் செய்யக் கூடிய வாய்ப்பு எங்களுக்கு ஏற்பட வேண்டுமானால் நாங்கள் ஏற்கக் கூடிய– எங்களுக்கென்று தீர்வொன்று வருமாக இருந்தால் விரைவில் அபிவிருத்தி செய்ய முடியும். அதுவரை எவ்வாறாயினும் எவ்வளவு தூரம் இந்த அபிவிருத்தியை செய்ய முடியுமோ அனடிப்படையில் அரசிடமிருந்து பெற்று இதனைச் செய்ய முடியுமோ செய்வோம். அவ்வாறு செய்ய வேண்டிய கடப்பாட்டில்தான் தற்போதும் இருக்கின்றோம். இதுவும் உரிமையின் ஒரு பகுதி என்தயும் நாங்கள் மறந்துவிடக்கூடாது.

### கருத்துச் சுதந்திரம்

கேள்வி :– விடுதலைப் புலிகளின் மூத்த போராளி பசீர் காக்கா அண்மையில் சுமந்திரன் குறித்து தெரிவித்த கருத்துச் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் அந்தச் செய்தி தொடர்பில் உங்கள் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்:–இந்த ஊடக அமையத்தில் இருந்துதான் மூத்த போராளி பசீர் காக்கா செவ்வி கொடுத்திருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் இருந்த வெளிவரும் சகல பத்திரிகைகளும் இலத்திரனியல் ஊடகங்களும் அதனைப் பிரசுரித்திருக்கின்றன. வெறுமனே எங்களது பத்திரிகைதான் பிரசுரித்தது என்றில்லை. இங்கு ஒன்றை எல்லாரும் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஊடக சுதந்திரம், கருத்துச் சொல்லும் சுதந்திரத்தில் சட்டத்திற்குட்பட்டு சரியாகச் செய்துகொண்டு போனால் அதில் எங்கள் கருத்துச் சொல்ல இடமில்லை.

அதனடிப்படையிலையே எங்களது பத்திரிகை ஆசிரியபீடத்தினர் என்னிடம் வந்து இது குறித்து கருத்து சொல்லவும் இல்லை. கருத்து கேட்கவும் இல்லை. குறிப்பாக வழக்கம்போல அவர்களே செய்தார்கள். கடந்த 36 வருட என் ஊடக அனுபவத்தில் ஒரு நாள் கூட ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த யாரும் வந்து என்னிடம் இதை போடுவதா, அதை போடுவதா என்று கதைத்ததில்லை. ஆக அவர்கள் ஊடகவியலாளர்களாகச் செயற்பட்டிருக்கின்றனர்.

ஆயினும் இந்த இடத்தில் அந்தச் செவ்வி மட்டும் ஏன் முக்கியமாகக் காட்டப்பட்டது என்பதை தற்போது அதை முக்கியப்படுத்தியவரிடம்தான் கேட்க வேண்டும். உண்மையில் எனக்கு அதற்கான காரணம் தெரியவில்லை. ஏனென்றால் முதலில் எந்தச் செய்தியாக இருந்தாலும் சாதகமோ, பாதகமோ எங்களது பத்திரிகையில் வரும். அதை நடுநிலைமை கருதி எடுத்துக் கொள்வார்கள். இங்கே ஊடக அமையத்தில் ஒருவர் வந்து செவ்வி கொடுத்திருக்கின்றார் என்றால் அது எல்லா ஊடகங்களிலும் வருவது வழக்கம். அதனடிப்படையில்தான் அந்தச் செய்தியும் ஊடகங்களில் வந்திருக்கின்றது.

எனவே இது ஒரு கஷ்டமான விடயம் அல்ல. ஆனால் அதை யார், எப்படி எப்படி தங்களுடைய எண்ணங்களில் போடுகின்றார்களோ அதைப் பொறுத்து அதன் தாக்கங்கள் உண்டு. எனவே மாலைக் கண் கொண்டு நோக்கினால் அது எப்படி இருக்கும் என்று நான் சொல்லி தெரிய வேண்டியதில்லை. நல்லது மாத்திரம் வந்தால் அதை ஏற்றுக் கொள்வதும் அதைப்பற்றி ஏதாவது விமர்சித்தால் பின்னர் அதற்கு ஒரு அர்த்தம் கற்பிப்பதும் அவ்வளவு ஆரோக்கியம் இல்லை.

குறிப்பாக அரசியல்வாதிகள் எப்பவுமே முதிர்ச்சிகளை வெளியிடவேண்டும். முதிர்ச்சியாக நடக்கவேண்டும். ஏனென்றால் மக்கள் எங்களைப் பார்த்து எங்கள் பின்னால் வருகின்றனர். ஆகையினால் அவர்களைச் சரியான முறையில் வழி நடத்தவேண்டும். ஆகவே ஓர் ஊடகத்தின் செய்தியில் பிழை இருந்தால் அது குறித்து தெரிவிக்க எல்லாவித உரிமையும் இருக்கின்றது. எத்தனையோ வழி முறைகள் ஊடாக அந்தச் செய்தியைச் சரியான முறைக்கு கொடுக்கச் சொல்லி கேட்கலாம் அல்லது செய்தியை அனுப்பலாம் அல்லது மறுப்புத் தெரிவிக்கலாம் என எத்தனையோ வழி உள்ளது.

எனவே அரசியலில் எங்களுடைய ஒரே கட்சி என்றாலும் நாங்கள் நிதானமாக நடக்கும்போது வெற்றியளிக்கும். இப்போது என்னிடம் பத்திரிகை இருக்கிறது. அதை எல்லோரும் சரி என்று சொல்வதில்லை. சிலர் குறைகளையும் சொல்கின்றனர். அதற்காக நான் யாரையுமே விமர்சிப்பதில்லை. என்னைப் பற்றி எத்தனையோ விசயங்கள் வருகின்றன. அவை குறித்து என்றாவது, எங்கையாவது, அவற்றுக்குப் பதில் கொடுத்திருக்கிறேனா என்று பாரத்திருக்கறீர்களா? ஏனெனில் எத்தனையோ விமர்சனங்கள் வந்தாலும் அதிவும் ஆதாரமில்லாத விமர்சனங்கள் கூட முன்வைக்கப்படுகின்றன.

அதில் உதாரணத்திற்கு நிதிக் கம்பனி குறித்து டக்ளஸ் தேவானந்தா சொன்னதை எல்லாரும் போட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அதில் ஒருநாள் கூட நான் இயக்குநராக இருந்ததில்லை. முக்கியமாக இதனைக் குறித்து முன்னைய காலத்தில் டக்ளஸ் தேவானந்தாதான் சொன்னார். கொஞ்சம் படித்தவர்கள் சொன்னால் பரவாயில்லை என்பதால் அதைக் குறித்து நான் கருத்தில் எடுக்கவில்லை. ஆனால் இப்போது அதை வைத்துக் கொண்டு சின்ன தவ்வல்கள் தங்களுக்கு ஆதாரமாகப் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அதன் உண்மைத் தன்மை தெரிய வேண்டுமென்றால் நேரடியாக மத்திய வங்கிக்குப் போகலாம். நேரடியாக கம்பனி பதிவு செய்யப்பட்ட இடங்களுக்குப் போகலாம். அங்கு சென்றால் யார் யார் இதில் இருக்கின்றனர். யார் இயக்குநராக இருந்தவர் என்பது உட்பட சகலதும் தெரிய வரும். எனவே பல வழிகளிலும் ஒவ்வொருவரும் அரசியல்வாதிகள் என்பதால் எங்களுக்கு எதிராக விமர்சனங்கள் வைக்கப்படும்.

கேள்வி:– சக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு எதிராகக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புக்கள் கிளம்பியிருப்பதுடன் மாறி மாறி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றதே?

பதில்:–நாங்கள் கால நீரோட்டத்தில் ஓட வேண்டும். நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் சரியான முறையில் மக்களை வழிநடத்தவேண்டும். நடந்த சம்பவங்களைச் சொல்லும்போது மிக அவதானமாக நாங்கள் செயற்பட வேண்டும். ஒன்றைச் சொல்லிவிட்டு அதற்கு காரணங்கள் கற்பிப்பது வெற்றியளிக்காது. ஆகவே சொல்ல முதலே அவதானமாக நாங்கள் செயற்பட வேண்டும்.

எனவே சுருக்கமாகச் சொல்ல விரும்புவது என்னவெனில் நாங்கள் ஆயுதமேந்திப் போராட வெளிக்கிட்டது எங்களை அடக்க முற்பட்டதால்தான். அதாவது ஆயுதத்தால் இராணுவம், பொலிஸ், விமானப்படை எனச் சகலரும் இராணுவமயப்படுத்தப்பட்டே எம்மை அடக்கி ஒடுக்கிய செயற்பாடுகளைச் செய்தனர். அது எல்லாமே வன்முறை. ஆகாயத்தில் இருந்து குண்டை போட்டாலும் வன்முறைதான். கீழே இருந்த 'மல்டி பறலால்' அடித்தாலும் வன்முறைதான்; துப்பாக்கியால் சுட்டாலும் வன்முறைதான்.

அவ்வாறாக அவர்கள் வன்முறை தொடங்கிய பின்புதான் எங்களைக் காப்பாற்றுவதற்காக ஆயுதம் ஏந்தப்பட்டது. இன்று ஓரளவிற்கு நாங்கள் வெற்றியடைந்திருக்கிறோம் என்றால் அது ஆயுதம் ஏந்திப் போராடியதால்தான். அந்தப் போராட்ட காலத்தில்தான் அரசு இறங்கி வந்தது. அதனூடாக நாங்கள் ஒன்றை அடையக் கூடிய சாத்தியமும் இருந்தது. ஆகவே நாங்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். முக்கியமாக எங்களுடைய இந்தப் பிரச்சினைகளில் பல பேர் தங்களை அர்ப்பணித்திருக்கின்றார்கள். அந்த அர்ப்பணிப்புக்கு நாங்கள் இன்னும் அர்த்தம் கற்பிக்க வேண்டுமே தவிர, அதன் சாதக, பாதகங்களை எடுத்து கொண்டு போகும் நேரம் இதுவல்ல.

இன்று ஜெனீவாவில் இந்தப் பிரச்சினை எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு யார் அடிப்படைக் காரணம் என்றால் எங்களுக்காக தங்களை அர்ப்பணித்த அத்தனை பேரும்தான். அவர்கள் எங்களுக்காக விட்டுச் சென்றதை நாங்கள் சரியாகச் செய்ய வேண்டும். அதை நோக்கி நாங்கள் போக வேண்டும். ஆயுதம் ஏந்தியதை யாருமே பிழை சொல்ல முடியாது. அவ்வாறு பிழை என்று நினைத்திருந்தால் அன்றே தமிழ் மக்கள் பக்கம் 02 »

# வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள 315 பேருக்குக் கொரோனா இல்லை!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்த 315 பேரின் பரிசோதனை முடிவுகளில், அவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று உள்ளதா என மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனைகளின் முடிவுகளின் அடிப்படையில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் தேசிய செற்பாட்டு மையத்தின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஆயினும், கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பப்பட்ட கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் இன்னும் கிடைக்கப் பெறவில்லை எனவும் அவர் கூறினார்.

315 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனை முடிவுகளில் நேற்று முன்தினம் 170 பேருக்குத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏனையோரின் முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டமைக்கமைய குறித்த 315 பேருக்கும் கொரோனா தொற்று இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

போதைக்கு அடிமையான ஒருவர், கந்தக்காடு புனர்வாழ்வு மையத்திலிருந்து கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி, வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து சுகவீனமுற்ற குறித்த கைதிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டதோடு, அவருடன் தொடர்புடைய சுமார் 180 பேர் கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சிறைக் கைதிகள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு கொரோனா தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் கைதிகளைப் பார்வையிட வருவதற்கு, மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சி கிழக்கில் 10 மீனவர் சிக்கினர்!



வடமராட்சி, ஜூலை 09

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் கடற்படை நீரியல் வளத்துறை, அதிகாரிகள் மற்றும் பிரதேச மீனவர்கள் இணைந்து சுருக்குவலை தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 10 பேரைக் கைது செய்தமையுடன் அவர்கள் பயன்படுத்திய படகுகள் மற்றும் ஒட்சிசன் சிலிண்டர் என்பவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் அண்மைக் காலமாக கடற் கரையோரங்களில் பிற மாவட்ட மீனவர்கள் வாடி அமைத்து வழிச்சல் வலை மற்றும் அட்டை தொழிலிற்கு அனுமதி பெற்று விட்டு டைனமற், சுருக்கு வலை தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் நேற்றைய தினம் நீரியல் வளத்துறை மீன்பிடி பரிசோதகர்கள் கடற்படை மற்றும் பிரதேச மீனவர்கள் இணைந்து படகுகள் மற்றும் 10 நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தனர் என நீரியல் வளத்துறை செய்திகள் தெரிவிக்கின்றன.

# சங்குபிட்டி பாலத்தினருகே விபத்து





சங்குபிட்டி பாலத்தினருகே டிப்பர் வாகனமும் முச்சகரவண்டியும் நேற்றிரவு மோதி விபத்துக்குள்ளாகின.

கிளிநொச்சியை சேர்ந்த மூவர் படுகாயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




# கருணாவுடன் சரணடைந்த 150 புலிகளில் 80 பேர் 13 வயதுச் சிறுவர் போராளிகள்!

## சரத் பொன்சேகா திடுக்கிடும் தகவல்

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து வந்த கருணா இராணுவத்திடம் சரணடைந்த போது அவருடன் 150 விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் சரணடைந்தனர் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர்களில் 80 பேர் 13 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகள் அமைப்பில் சிறுவர் போராளிகள் இருக்கவில்லை என கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்திருந்தார்.

18 வயதுக்குட்பட்ட எவரையும் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைத்துக் கொள்ளக் கூடாது என தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அறிவுறுத்தி இருந்தார் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்ட விடயத்தை கூறியிருந்தார்.

இவ்வாறு கருணா தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# சவூதியிலிருந்து வந்த 9 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூலை 09

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 13 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சவூதி அரேபியாவிலிருந்து வந்த 09 பேர், பிலிப்பைன்ஸிலிருந்து வந்த அந்த நாட்டுப் பிரஜை ஒருவர், பங்களாதேஷிலிருந்து வந்த 02 பேர், ஈரானிலிருந்து வந்த ஒருவர் ஆகிய 13 பேரே நேற்று கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களாவர்.

நேற்றிரவு தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2,094 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 1,967 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் தற்போது 116 நோயாளிகள் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே வைத்தியசாலைகளில் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 56 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.07.2020 இல் வெளியிடப்பெற்றது.